பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 04 புதன்கிழமை 17.02.2021 கதிர் 104

இது ரகசியம் அல்ல!

பாலின சமத்துவம் தொடர்பில் ஒரு குறிப்பிடத்தக்க சர்ச்சை பொலிஸ் திணைக்களத்தில் உருவாகியுள்ளமை அவதானிக்கப்பட வேண்டியதாக உள்ளது.

பிம்ஷானி ஜஸின் ஆராய்ச்சி என்ற பெண் பொலிஸ் உத்தியோகத்தர் இலங்கை பக்கம்02 »

# வடக்கில் உள்ள தீவுகளை சீனாவுக்கு வழங்கும் திட்டத்தில் மாற்றமில்லை!



## கம்மன்பில திட்டவட்டம்; டலஸ் பின்னடிப்பு



வடக்கில் உள்ள மூன்று தீவுகளை சீன நிறுவனத்துக்கு வழங்கும் தீர்மானத்தில் மாற்றங்கள் கிடையாது என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சூரிய சக்தி மின் உற்பத்திகளுக்காக வடக்கிலுள்ள 2

## காரைநகரில் காணி சுவீகரிப்பு

யாழ்.,காரைநகர் இந்துக் கல்லூரிக்குச் சொந்தமான 8 பரப்பு அளவு கொண்ட காணி, கடற்படை முகாம் அமைப்பதற்காக இன்று அளவீடு செய்யப்படவுள்ளது என அறியமுடிகின்றது.

எலறா என்கின்ற கடற்படைத் தளம் அமைக்கும் நோக்கிலேயே குறித்த காணி அளவீடு இன்று காலை 9 மணியளவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

அண்மையில் தனியாருக்குச் சொந்தமான வேலணைப் பகுதியில் உள்ள 2

## 77 ஆயிரத்தைத் தாண்டியது தொற்றாளர் எண்ணிக்கை!

### உயிரிழப்பு 409 ஆக உயர்வு

இலங்கையில் நேற்றும் 756 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 77 ஆயிரத்து 180 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, 2

# சீனாவால் இலங்கை ஆக்கிரமிப்பு

## ராஜபக்ஷ அரசின் வெளியுறவுக்கொள்கையால் நாடு அழிகின்றது எனச் சந்திரிகா கடும் சீற்றம்



சீனாவால் இலங்கை முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது எனக் குற்றஞ்சாட்டியுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, தற்போதைய ராஜபக்ஷ அரசின் வெளிவிவகாரக் கொள்கை நாட்டை அழிவுப்பாதைக்கே கொண்டுவந்துவிட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டினார்.

விஜயகுமாரதுங்கவின் 33 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு கொழும்பிலுள்ள அவரது சமாதியில் நேற்று அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே சந்திரிகா மேற்கண்டவாறு குறிப்பிட்டார். 2

## இலங்கையில் பா.ஜ.க. ஆட்சி கட்டுக்கதையே

### அரசு கூறுகின்றது

இந்தியாவின் ஆளும் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சி இலங்கையில் ஆட்சியமைக்கும் திட்டத்தில் இருக்கின்றது என வெளியாகும் தகவல்கள் வெறும் கட்டுக்கதையே என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

திரிபுரா மாநில முதலமைச்சர் பிப்லாப் குமார் வெளியிட்டுள்ள கருத்தானது உத்தியோக பூர்வமானது அல்ல எனவும், இதனால் இது தொடர்பாக இலங்கை அரசின் நிலைப்பாட்டைக் கூற முடியாது எனவும் அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இலங்கை மற்றும் 2



## படையினரின் வெளிநாட்டுப் பயணத்தைத் தடுக்கும் முயற்சிகள் வெற்றிபெற இடம்கொடுக்கவேமாட்டோம்

### இப்படி சூளுரைக்கின்றார் பிரதமர் மஹிந்த

போரை வெற்றிகொண்ட போர் வீரர்கள் வெளிநாடு செல்வதையோ அல்லது வெளிநாடுகளில் வேலை செய்வதையோ சாத்தியமற்றதாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 2

## யாழில் சித்த மருத்துவ பட்டதாரிகள் போராட்டம்




(எஸ்.நிதர்ஷன்)

தமது வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு வலியுறுத்தி சித்த மருத்துவ பட்டதாரிகள் நேற்று யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினர்.

சித்த மருத்துவ பட்டதாரியாகி நான்கு வருடங்கள் கடந்துள்ள 2

## ஆசிரியை உட்பட 5 பேருக்கு வடக்கில் நேற்று கொரோனா

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் மேலும் 5 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் ஒருவர் பூநகரியில் பணியாற்றும் யாழ். தென்மராட்சி, தனங்கிளப்புப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியை என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார். 2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பொலிஸ் துறை வரலாற்றில் முதல் தடவையாக பிரதி பொலிஸ்மா அதிபராக அண்மையில் நியமிக்கப்பட்டார்.

இந்த நியமனத்துக்கு எதிராக 22 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களான ஆண்கள் இலங்கை உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர்.

நேற்று இந்த மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டன. மே 18ஆம் திகதி விசாரணை நடக்கவிருக்கின்றது.

பொலிஸ் பதவி உயர்வு தொடர்பான விதிமுறைகளில் 'பெண்கள்' பற்றியே குறிப்பிடப்படவில்லை, 'ஆண்கள்' என்று மட்டுமே பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஆகையினால் பெண் ஒருவருக்கு இந்தப் பதவி உயர்வை வழங்க முடியாது என்பது மனுதாரர்களினது நிலைப்பாடாக உள்ளது.

பாலின சமத்துவம் முதலில் பொலிஸ் துறைக்குத்தான் சரியான முறையில் போதிக்கப்பட வேண்டும் போல.

* * *

ஆளும் கட்சிக்குள் முட்டி மோதல்கள் மென்மேலும் தீவிரமடைந்து வருகின்றன.

ஆளும் தரப்பில் பின்னணியில் நின்று காய் நகர்த்தும் முழு அளவிலான செல்வாக்கைக் கொண்டிருக்கின்ற பஸில் ராஜபக்ஷவுக்கும், விமல் வீரவன்ஸ போன்ற தரப்புகளுக்கும் இடையிலான முரணிலையே இந்த இழுபறிக்குப் பிரதான காரணம் என்று கூறப்படுகின்றது.

கட்சித் தலைவர் பதவியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வசம் மாற்றினால் தான் கட்சியின் 'தோன்றாய்த்' தலைவராக இருந்து பஸில் செலுத்தி வரும் அதிகாரத்துக்கு முடிவு கட்டலாம் என்பது விமல் தரப்பின் நிலைப்பாடாம்.

மறுபுறம் ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை நடத்திய ஜனாதிபதி ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அரசு அம்பலப்படுத்துமானால் ஆளும் கூட்டணியின் பிரதான பங்காளிக் கட்சிகளில் ஒன்றான சுதந்திரக் கட்சிக்குப் பெரும் நெருக்கடி ஏற்படும் என்று கருதப்படுகின்றது. சு.க. தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவின் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கும் கத்தி போன்றது இந்தப் பரிந்துரை அறிக்கை என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள். அறிக்கை விவரம் வெளியானால் மைத்திரிபால சிறிசேன பெரும் அரசியல் நெருக்கடியை எதிர்கொள்வார் என்றும் சு.க. தலைமைப் பதவியை பறிகொடுக்க வேண்டிக் கூட நேரலாம் என்றும் கூறுகின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

மொத்தத்தில் ஆளும் தரப்புக் கூட்டணிக்கு இது போதாத காலம் என்பது மட்டும் உண்மை.

* * *

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் சரணடைந்த புலிகள் கொல்லப்பட்டனர் என்ற உண்மையை முன்னாள் பாதுகாப்புச் செயலாளராக இருந்த – இப்போதைய ஜனாதிபதி – கோட்டாபய ராஜபக்ஷ அச்சமயம் தன்னிடம் கூறினார் என யுத்தக் குற்றங்கள் மற்றும் உலகக் குற்றவியல் நீதிக்கான அமெரிக்கத் தூதுவராக இருந்த ஸ்ரிபன் றாப் தெரிவித்த கருத்தை இலங்கை ஜனாதிபதி அலுவலகம் கடுமையாக மறுத்துள்ளது.

பதவியை விட்டு விலகி ஏழு வருடங்களின் பின்னர் இத்தகைய புதிய கதையை ஸ்ரிபன் றாப் இப்போது அவிழ்த்து விடுவது ஏன் என்றும் ஜனாதிபதி அலுவலக அதிகாரி ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய தரப்பின் மறுப்பு, மேற்படி குற்றச்சாட்டு ஸ்ரிபன் றாப் தரப்பினால் முன்வைக்கப்பட்ட போதே எதிர்பார்க்கப்பட்டதுதான்...!

– மின்னல் –

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நேபாளம் ஆகிய நாடுகளில் ஆட்சி அமைக்கும் திட்டத்தில் பா.ஜ.க. உள்ளது என இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்தார் என்று திரிபுரா மாநில முதலமைச்சர் பிப்லாப் குமார் டெப் தெரிவித்துள்ள நிலையில், அது தொடர்பாக, கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கேள்விகள் எழுப்பப்பட்டன.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் உதய கம்மன்பில, இந்திய உள்துறை அமைச்சர் அமித் ா அவ்வாறு கூறியுள்ளார் என்று திரிபுரா மாநில முதலமைச்சர் பிப்லாப் குமார் கருத்து வெளியிட்டுள்ளாரே தவிர, அமித் ா எங்கேனும் அவ்வாறு கூறியுள்ளார் என்று செய்திகள் எதுவும் வெளிவரவில்லை. இதனால் இந்த விடயத்தை நாங்கள் வெறும் வதந்தியாகவே பார்க்கின்றோம் – என்றார்.

உத்தியோகபூர்வமாக பாரதிய ஜனதாக் கட்சி அவ்வாறு அறிவிக்குமாக இருந்தால் மட்டும் இலங்கை அரசு அது பற்றி உரிய பதிலை வழங்கும் என்றும் அமைச்சர் உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார்.

## படையினரின் வெளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தெரிவித்தார்.

வடமேல் மாகாண கால்வாய் அபிவிருத்தித் திட்டத்தின் மஹகித்துலா மற்றும் மஹகிருல நீர்த்தேக்கங்களின் கட்டுமானப் பணிகளை நேற்று ஆரம்பித்து வைத்து, உரையாற்றுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லாட்சி அரசு இந்த நாட்டின் போர் வீரர்களுக்கு எதிரான மனித உரிமைத் தீர்மானங்களை ஒப்புக்கொண்டது. இது மாபெரும் துரோகம்.

உலகின் மிக மோசமான பயங்கரவாதத்துக்கு எதிராக நாம் போராடிய போதிலும் நாட்டின் அபிவிருத்தியைக் கைவிடவில்லை.

போர் வீரர்கள் வெளிநாடு செல்வதையோ அல்லது வெளிநாடுகளில் வேலை செய்வதையோ சாத்தியமற்றதாக மாற்றும் முயற்சிகள் வெற்றியளிக்க இடம் கொடுக்கமாட்டோம்.

விவசாயத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் பொருளாதாரத் திட்டங்களை நாம் வகுத்துள்ளோம். நாட்டில் குடிதண்ணீர் பிரச்சினையை அடுத்த சில ஆண்டுகளில் தீர்க்க முடியும் – என்றார்.

## யாழில் சித்த மருத்துவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

போதும், இன்னும் பட்டதாரிகள் நியமனங்களுக்குள் தாம் உள்வாங்கப்படவில்லை எனவும், இதனால் ஜனாதிபதியும், பிரதமரும் இதில் தலையிட்டு தமது கோரிக்கைக்குத் தீர்வு காண வேண்டும் எனவும் பேரணியில் கலந்துகொண்டோர் வலியுறுத்தினர்.

வேலையற்ற சித்த மருத்துவ பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணியானது, சித்த மருத்துவ பீடத்திலிருந்து சித்த மருத்துவ வைத்தியசாலை வரையில் முன்னெடுக்கப்பட்டது.

தமது போராட்டத்துக்கு யாழ். பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம் ஆதரவளித்த போதிலும், அந்தப் பேரணியில் மாணவர்களைக் கலந்து கொள்ள விடாது தடுக்கப்பட்டிருந்தனர் எனப் எனப் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

## காரைநகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

காணிகள் கடற்படையினரின் தேவைக்குச் சுவீகரிக்கும் நோக்கில் அளவீடுகள் மேற்கொள்வதற்கு முனைந்தபோது, பொது மக்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகளின் எதிர்ப்பை அடுத்து இடைநிறுத்தப்பட்டது.

இந்தநிலையிலேயே காரைநகரில் பாடசாலைக்குச் சொந்தமான காணியை சுவீகரிக்கும் நோக்கில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன எனத் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

# அடக்கம் செய்யலாம் என்பது பிரதமரின் தனிப்பட்ட கருத்து

## கம்மன்பில தெரிவிப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்கள் விடயத்தில் நிபுணர் குழுவின் முடிவே இறுதியானது எனவும், ஜனாதிபதி, பிரதமர் அல்லது அமைச்சரவைக்கு அந்த முடிவை மாற்றும் அதிகாரம் இல்லை எனவும் இணை அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களை அடக்கம் செய்ய அனுமதிக்கப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்த நிலையில், அரசின் நிலைப்பாட்டை கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் உதய கம்மன்பில தெளிவுபடுத்தினார்.

கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் என்று பிரதமர் அவரது தனிப்பட்ட விருப்பத்தையே வெளிப்படுத்தினார் எனவும் உதய கம்மன்பில தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளரின் முடிவில் மூன்றாம் நபர்கள் அல்லது அரசியல்வாதிகள் தலையிடமுடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியாகும் வரை தற்போது பின்பற்றப்படும் நடைமுறையே தொடரும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கோ, பிரதமருக்கோ அல்லது அமைச்சரவைக்குக்கூட இல்லை என்றும், அந்த அதிகாரம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தனவுக்கு மட்டுமே உள்ளது என்றும் உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார்.

# பதில் சுகாதார அமைச்சராக பேராசிரியர் சன்ன ஜயசுமன

## ஜனாதிபதியால் நியமனம்



பதில் சுகாதார அமைச்சராகப் பேராசிரியர் சன்ன ஜயசுமன நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இவர், ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் இராஜாங்க அமைச்சராகச் செயற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால், இவருக்குப் பதில் சுகாதார அமைச்சராக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

## 77 ஆயிரத்தைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தவர்களில் 1018 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து இதுவரை 70 ஆயிரத்து 429 பேர் குணமடைந்துள்ளமையுடன், 6 ஆயிரத்து 318 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனிடையே கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த மேலும் 6 பேர் உயிரிழந்துள்ளனர் என அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

நேற்றுப் பதிவாகிய உயிரிழப்புகளுக்கமைய நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 409 ஆக உயர்வடைந்துள்ளது.

## ஆசிரியை உட்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று 376 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில் இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பஸ்ஸில் பயணித்தவர்களிடம் கேரதீவில் வைத்து பெறப்பட்ட மாதிரிகளின் அடிப்படையிலேயே இவர்கள் இருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் மன்னாரைச் சேர்ந்தவர். மற்றையவர் தனங்கிளப்புப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியை. இவர் பூநகரியில் பணியாற்றும் நிலையில் பஸ்ஸில் பயணித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 414 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில் 3 பேருக்குக் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்கள் மூவரும் கிளிநொச்சி–கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள். அத்துடன் இவர்கள் கரைச்சியில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலையின் பணியாளர்களாவர் – என்றார்.

## வடக்கில் உள்ள தீவுகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தீவுகளை சீன நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பாக அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டதா எனவும், அரசின் இந்தத் தீர்மானத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதா எனவும் அந்த ஊடக சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் கேள்விகளை எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் உதய கம்மன்பில, விலைமனுக் கோரலின் அடிப்படையில் சீன நிறுவனத்துக்கு அந்தத் தீவுகளை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்றார்.

எவ்வாறாயினும் அந்த அமைச்சரவை தீர்மானத்தை தாமதப்படுத்துவதாகவோ அல்லது இரத்துச் செய்வதாகவோ விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் டலஸ் அழகப்பெரும அமைச்சரவைக்கு அறிவிக்காதமையால் அந்தத் தீர்மானம் தொடர்ந்தும் வலுவில் இருப்பதாகவே நான் கருதுகின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சீனாவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: –

முன்னாள் தலைவர்கள் அர்ப்பணிப்புடன் கட்டியெழுப்பிய இந்த நாடு இப்போது மோசமான நிலையில் சென்றுகொண்டிருக்கின்றது. இந்தநிலையிலிருந்து முன்னேறிச் செல்ல முடியாத நிலையில் நாடு உள்ளது.

படித்த, ஊழலற்ற இளைய தலைமுறையைச் சேர்ந்த அரசியல்வாதிகளே இன்று நாட்டுக்குத் தேவையாகவுள்ளனர். இந்த அரசின் வெளியுறவுக் கொள்கை அழிவுப் பாதைக்கே நாட்டைக் கொண்டு சென்றிருக்கின்றது.

இலங்கை இன்று சீனாவால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றது. சீனா மீது எனக்கு எந்தவிதமான கோபமும் இல்லை. ஆனால், இந்த நாட்டில் சீனாவுக்குக் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது – என்றார்.

# பளையில் மக்கள் குடியிருப்பு இடித்தழிப்பு: வீதியை மறித்து போராடினார்கள் மக்கள்!





கிளிநொச்சி – பளை, கரந்தாய் பகுதியில் தென்னை பயிர்ச் செய்கை சபையால் உரிமை கோரப்பட்ட நிலையில் மக்களிடம் கையளிக்க அறிவுறுத்தப்பட்ட காணியில் தற்காலிகமாக வசித்த மக்களின் கொட்டகைகளை குறித்த சபையினர் பொலிஸாரின் பாதுகாப்புடன் உழவியந்திரம் மூலம் இடித்து அகற்றி, அங்கிருந்தோரை வெளியேற்றியுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இந்த சம்பவம் இடம்பெற்ற நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் ஏ9 வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். பச்சிளைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பளை, கரந்தாய் கிராமத்தில் 1976 ஆம் ஆண்டு மக்கள் குடியேறி இருந்தனர். அதன்பின் நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் காரணமாக பல்வேறு இடங்களுக்கு சென்ற மக்கள் போர் நிறைவடைந்ததன் பின்னர் 2010 ஆம் ஆண்டு மீண்டும் கரந்தாய் கிராமத்தில் குடியேறியிருந்தனர்.

அங்கு குடியேறியிருந்த காணியை தமக்குரியது எனத் தெரிவித்த தென்னை பயிர்ச்செய்கை சபையினர், 2015 அம் ஆண்டு மக்களை அந்த இடத்தில் இருந்து வெளியேற்றியிருந்தனர்.

இதனையடுத்து மக்கள் பல்வேறு இடங்களுக்கு சென்று பயன் கிடைக்காத நிலையில் யாழ்ப்பாண மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்திருந்தனர். இதன் பயனாக மக்களுடைய காணிகளை இரு வாரங்களுக்குள் மக்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என உரிய அதிகாரிகளுக்கு கடந்த வருடம் ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தும் இதுவரை அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இந்நிலையில், காணிகளை மக்களிடம் கையளிக்குமாறு பல தடவைகள் மனித உரிமைகள் ஆணைக்குழு உரியவர்களுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை நடவடிக்கை எடுக்காதமையால் மக்கள் தமது தீர்வைத் தாமே பெற்றுக்கொள்ளும் நோக்குடன் தமது காணிகளுக்குள் உள்நுளைந்து கடந்த இரண்டு மாதமாக தற்காலிகக் கொட்டகைகள் அமைத்து வசித்து வருகின்றனர்.

நேற்று அங்கு சென்ற தென்னை பயிர்ச் செய்கை சபையினர் பொலிஸாரின் பாதுகாப்புடன் மக்களின் தற்காலிக கொட்டகைகளை உழவியந்திரம் மூலம் இடித்தழித்து, மக்களை வெளியேற்றினர்.

இவ்வாறு இடிக்கப்பட்ட கொட்டகைகளை மற்றும் தூக்கி வீசப்பட்ட வீட்டு பாத்திரங்களை ஏ9 வீதியில் போட்டு வீதியை மறித்து பாதிக்கப்பட்டோர் போராட்டத்தை முன்னெடுத்தனர். போராட்டத்தின் காரணமாக ஏ9 வீதி சுமார் ஒரு மணித்தியாலங்களுக்கு மேல் முடக்கப்பட்டது. அதன்பின்னர் சம்பவ இடத்துக்குச் சென்ற பளை பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடினார். கலந்துரையாடலின்போது தென்னை பயிர்ச் செய்கை சபையினரால் அழிக்கப்பட்ட கொட்டகைகளை மீண்டும் அமைத்துத் தருவதற்கு ஏற்பாடு செய்வதாக மக்களுக்கு பொலிஸார் வாக்குறுதி வழங்கியமையால் போராட்டம் கைவிடப்பட்டது. இதேவேளை இந்த காணி தொடர்பில் நீதிமன்ற வழக்கு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 24 மணிநேரத்தில் 11 பேர் விபத்தில் சாவு!

*நாடு முழுவதும் கடந்த 24 மணிநேரத்தில் பதிவான வாகன விபத்துக்களில் மொத்தம் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.*

*ஐந்து மோட்டார் சைக்கிள் சாரதிகளும், நான்கு பாதசாரிகளும், ஒரு சாரதியும் மற்றும் பயணியொருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.*

*இதேவேளை கடந்த சில நாள்களில் நாட்டில் வாகன விபத்துக்களின் எண்ணிக்கை சீராக அதிகரித்து வருகின்றது.*

*அதன்படி அன்றாடம் 120 வாகன விபத்துக்கள் பதிவாகி வருகின்றன எனவும், அதனால் சுமார் 40 நபர்கள் காயமடைந்துள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.*

*எனவே கவனயீனமாக வாகனம் செலுத்துவதால் ஏற்படும் விளைவுகளை கவனத்தில் கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.*

# 42 நீதிமன்றங்கள் டிஜிற்றல் மயமாகும்!

நீதிமன்ற கட்டமைப்பில் டிஜிற்றல் மயப்படுத்தும் நடவடிக்கையின் கீழ் 42 நீதிமன்றங்களில் டிஜிற்றல் மயமாகும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

4 கட்டங்களின் கீழ் அனைத்து நீதிமன்றங்களும் டிஜிற்றல் மயப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

நீதிமன்ற கட்டமைப்பிக்குள் மேற்கொள்ளப்படும் அனைத்து மறுசீரமைப்பு அடிப்படை அபிவிருத்தி நன்மைகளும் பொது மக்களை சென்றடைய வேண்டும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

வழக்குகள் தாமதமின்றி நிறைவு செய்யப்பட்டு பொது மக்களுக்கு துரிதமாக சேவைகளை வழங்குதே அரசாங்கத்தின் அடிப்படை நோக்கமாகும்.

அம்பாந்தோட்டை மாவட்ட நீதிமன்றம் மற்றும் தங்காலை நீதிமன்ற கட்டடங்களில் நடைபெற்ற கலந்துரையாடலில் அமைச்சர் இந்த விடயங்களைத் தெரிவித்தார்.

நீதிமன்ற அபிவிருத்தி நடவடிக்கைகளில் சட்டத்தரணிகளின் கருத்துக்களும் முக்கியமானதாகும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



# தவக்காலச் சிந்தனை

## வெளிவேசங்களை களைந்து நம்பிக்கை ஒளியாக மாறும் காலம் தவக்காலம்

**கலாபூஷணம் செ.யோசப்பாலா**

**இன்று விபூதி புதன், கிறிஸ்தவ மக்களின் விசுவாச தவமுயற்சிகள் தவக்காலமாக ஆரம்பிக்கும் முதல்நாள். இறை இயேசுவின் பாடுகள், மரணம் பற்றி எம் வாழ்வோடு இணைத்து நாற்பது நாள்கள் ஆரம்பமாகும் திருநீற்று புதன் அன்று நெற்றியில் இட்டு "மனிதனே நீ மண்ணாக இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்" என சிந்திக்க அழைப்பு விடும் தவக்காலம் ஆரம்பம்.**

**இக்காலத்தில் நோன்பு, விரதம் உபவாசம் என்ற சொல்லை செயலால் தமது தவ பயணத்தில் தர்மங்கள் செய்து பிறருடன் ஒப்புரவாகி, இறை தியானத்தின் மூலம் ஆன்மீக தேடலால் இறைவனோடு சங்கமிக்க அழைப்பு விடும் காலமாகும்.**

**இறை வார்த்தையின் அழைப்பாக "மேலும் நீங்கள் நோன்பிருக்கும் போது வெளிவேடக்காரைப்போல் முகவாட்டமாக இருக்க வேண்டாம் தாங்கள் நோன்பிருப்பதை மக்கள் பார்க்க வேண்டும் என்றே அவர்கள் தங்கள் முகங்களை விகாரப்படுத்திக் கொள்கிறார்கள் என உங்களுக்கு உறுதியாக சொல்கிறேன். நீங்கள் நோன்பு இருக்கும்போது உங்கள் தலையில் எண்ணெய் தேய்த்து முகத்தை கழுவுங்கள். அப்பொழுது நீங்கள் நோன்பிருப்பது மக்களுக்குத் தெரியாது. மாறாக மறைவாய் இருக்கின்ற உங்கள் தந்தைக்கு மட்டுமே தெரியும் மறைவாய் உள்ளதை காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு ஏற்றகைமாறு அளிப்பார்" என்கிறார்.**

**இவை இன்றைய காலத்தில் எம்மவரின் தான தர்ம செயல்களில் ஏற்படும் பிரசார செயல்களில் காண்கின்றோம். யாரோ தந்த பொருள்களை பகிரும் போது கூட தம்மை பிரசாரப்படுத்தும் போது முகங்களை பல வடிவங்களில் காண முடிகிறது. இவை நிரந்தரமானவை அல்ல.**

**ஏழை எழியோர் வாழ்வு சிறக்க தான தர்மங்களை அளிக்க முன்வரும் பலரது நல்மன செயல்கள் பலரது வாழ்வுக்கு நம்பிக்கை ஊட்டும் செயல்களாகும். பகை கொண்டவர்களை மன்னித்து ஏற்றுக் கொள்ளவும், உடல் இச்சைகளை களைந்து மன ஒறுப்புக்களால் இறைவனோடு சங்கமிக்கவும், எல்லா சமயங்களிலும் விரதம், நோன்பு, மாமிச தவிர்ப்புக்கள் நடைபெற்றே வருகின்றன. இவை ஆன்மீகத்தில் ஐக்கியமான செயல்களே. அவை வெளிவேசமாக இராது இறைவனோடு சங்கமிக்கும் வழிபாடும் வாழ்வுமாக மாறவே தவக்காலம் எம்மை வழிப்படுத்தும் அரிய காலமாக தரப்படுகிறது.**

**சோதனைகள், சவால்கள், திசை திருப்பும் பல சந்தர்ப்பங்களிலும் மனதை அலைய விடாது நாற்பது நாள்கள் இறைவனின் இருப்பை இறப்பை தியானித்து மனம் மாற்றுக் காலமாக தவப் பயணத்தை புனிதமாக விபூதிப் புதனுடன் ஆரம்பித்து எமது வாழ்வை புனிதமாக்க கிடைத்த அழைப்பை ஏற்று இறை உறவில் சங்கமமாவோம்.**

# முழு தலைக்கவசம் அணிபவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டாம்!

*பொலிஸாருக்கு சட்டமா அதிபர் பணிப்பு*

முழுமையாக முகத்தை மறைக்கும் வகையில் அமைந்த தலைக் கவசங்களை அணிந்த மோட்டார் சைக்கிள் சாரதிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்ட ஆலோசகர் பதில் சொலிசிட்டர் ஜெனரல் பரிந்தா ரணசிங்க மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இதனைத் தெரிவித்துள்ளார்.

# இழப்பீட்டுக்கான அலுவலகம் தொடர்ந்தும் முறையாகச் செயற்படுதல் வேண்டும்!

**கேர்ணல் ரத்னப்பிரிய பந்து வலியுறுத்தல்**

நாட்டில் இடம்பெற்ற இனமோதல்கள் மற்றும் போர் ஆகியவற்றின் போது பலர் காணாமல்போயிருக்கின்றார்கள். எனவே, அதற்கான இழப்பீட்டைப் பெறுவதற்குத் தகுதிவாய்ந்தவர்கள் பலர் நாட்டில் இருக்கின்றார்கள் என்பதை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்களுக்கான இழப்பீட்டை வழங்குவதற்கு இழப்பீட்டுக்கான அலுவலகம் தொடர்ந்தும் முறையாக செயற்பட வேண்டியது அவசியமாகும் என்று அந்த அலுவலகத்தின் முன்னாள் உறுப்பினர் கேர்ணல் ரத்னப்பிரிய பந்து தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியவை வருமாறு –

இலங்கை ஒரு சிறந்த நாடு என்றாலும் கூட, இங்கு திறமையானவர்களுக்கும் தகுதிவாய்ந்தவர்களுக்கும் இடமளிக்காத நிலையொன்று காணப்படுகின்றது. அதன் காரணமாகத் தற்போது நான் இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் உறுப்பினர் என்ற அந்தஸ்த்தைக் கொண்டிருக்கவில்லை.

எனினும் இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் செயற்பாடுகளைப் பொறுத்தவரையில் முதலில் ஒன்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். இழப்பீட்டுக்கான அலுவலகம் என்பது போரின் போது காணாமல்போனவர்களின் உறவினர்களுக்கு இழப்பீட்டைப் பெற்றுக்கொடுப்பதற்கானது மாத்திரமல்ல. மாறாக, கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற இனமோதல்கள் மற்றும் வேறு சில சந்தர்ப்பங்களில் காணாமல்போனவர்களின் உறவினர்களுக்கும் இழப்பீட்டை வழங்குவதற்கான பொறுப்பைக் கொண்டிருக்கிறது.

ஆகவே, இங்கு இழப்பீட்டைப் பெறுபவர்கள் என்ற பதத்தையும் அதற்குள் உள்ளடங்கும் தரப்பினர் தொடர்பிலும் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும். நாட்டில் இடம்பெற்ற இனமோதல்கள், போர் உள்ளிட்டவற்றால் பாதிக்கப்பட்டு இழப்பீட்டைப் பெறுவதற்குத் தகுதி வாய்ந்தவர்கள் இருக்கின்றார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே அவர்களுக்கான இழப்பீட்டை வழங்குவதற்கு இழப்பீட்டுக்கான அலுவலகம் தொடர்ந்தும் செயற்பட வேண்டியது அவசியமாகும்.– என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு மாகாண வைத்தியசாலைகளுக்கு 50 மருத்துவ உத்தியோகத்தர்கள் நியமனம்!

## மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

மத்திய சுகாதார அமைச்சால் வடமாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு 50 மருத்துவ அதிகாரிகள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர் என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை 15ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதுதொடர்பில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இவர்களில் யாழ்.மாவட்டத்துக்கு 13 பேரும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு 9 பேரும், வவுனியா மாவட்டத்துக்கு 11 பேரும், மன்னார் மாவட்டத்துக்கு 9 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 8 பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் நேற்று தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டனர்.

இந்நியமனத்தில் வடமாகாணத்தின் கஷ்ட பிரதேசங்களிலுள்ள சில வைத்தியசாலைகளுக்கும் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அந்த அடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஊர்காவற்றுறை, அனலைதீவு வைத்தியசாலைகளுக்கும், வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம், நெடுங்கேணி வைத்தியசாலைகளுக்கும் மன்னார் மாவட்டத்தில் தலைமன்னார் சிலாவத்துறை, வங்காலை வைத்தியசாலைகளுக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி, புதுக்குடியிருப்பு, அலம்பில், சம்பத்நுவர ஆகிய வைத்தியசாலைகளுக்கும் மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சாண் ஏற முழம் சறுக்கும் வேலை

**'சாண் ஏற முழம் சறுக்குவது'தான் தமிழர் தரப்பின் கதையாக எப்போதும் இருந்து வந்திருக்கின்றது. இப்போதும் அதுதான் போலும்.**

**வராது வந்த மாமணி போல இப்போது நமக்கு வந்திருக்கும் அருமையான வாய்ப்பு ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டம்தான்.**

**இதனை சரியான சந்தர்ப்பமாக நாம் பயன்படுத்துவதில்தான் இந்த இலங்கைத் தீவில் நமது தேசிய இனத்தின் எதிர்கால இருப்பும் நமது உரிமைகளும் தங்கியிருக்கின்றன என்பது அரசியலில் அரிச்சுவடி பாடம் படித்தவருக்கும் புரியும்.**

**பௌத்த, சிங்களப் பேரினவாதமே அரச வடிவெடுத்துப் பேயுருக் கொண்டு நிற்கின்றது. அதன் அடக்கு முறைகளுக்கு ஈடு கொடுக்க முடியாமல் துவண்டு போய்க் கிடக்கின்றன இந்தத் தீவின் சிறுபான்மை இனங்கள்.**

**இந்த உண்மை நிலையை – அவலத்தை – சர்வதேசத்துக்கும் எடுத்துரைத்து, உணர்த்தி, அதன் மூலம் பேரினவாதப் பிடியிலிருந்து நம்மை விடுவிக்கும் மார்க்கத்தைத் தேட வேண்டிய இக்கட்டு நிலைமை இப்போது.**

**ஆயுத வழிகளிலும், அஹிம்சை மார்க்கங்களிலும் எமது விடுதலைக்காகப் போராடிக் களைத்து, வழியின்றிப் பரிதவித்து நிற்கும் நமக்கு இன்று கொழுகொம்பு சர்வதேச சமூகம் மட்டும்தான்.**

**அந்த சர்வதேச சமூகத்தின் முன் எமது அவல நிலையை எடுத்துரைத்து – உண்மைகளை அம்பலப்படுத்தி – இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி தேடவும், பொறுப்புக் கூறலை நிலை நாட்டவும், இழப்பீடுகளைப் பெறவும், மீள நிகழாமையை உறுதிப்படுத்தவும் மிகப் பொருத்தமான – வாய்ப்பான – சமய சந்தர்ப்பம் ஜெனீவாவில் கூடும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் இந்த 46 அமர்வில்தான் வருகின்றது. இலங்கை நிலைமையை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் மீளாய்வு செய்யும் இந்தச் சந்தரப்பத்தில்தான் எமது ஆதங்கங்களை – எதிர்பார்ப்புகளை – அவலங்களை – அபிலாஷைகளை – சர்வதேச சமூகத்திடம் முன்வைத்து நாம் நிவாரணம் பெற முனையலாம்.**

**அதனால்தான் இந்த ஜெனீவா அமர்வை ஒட்டி தமிழ்த் தேசிய சக்திகள் – கட்சிகள் – ஒன்றுபட்டு நின்று, ஐக்கியமாகத் தங்கள் எதிர்பார்ப்புகளை ஒற்றைக் குரலில் வைக்க வேண்டும் என்ற கோரிக்கை பல தரப்புகளினாலும் வலியுறுத்தப்பட்டது.**

**சரியோ, பிழையோ, இந்த வற்புறுத்தல்களையும், நிலைமையின் கட்டாயத்தையும் உணர்ந்த சம்பந்தப்பட்ட தரப்புகள் தங்களுக்குள் உச்ச விட்டுக் கொடுப்புகளை, மேற்கொண்டு இணக்கமான நிலைப்பாடு ஒன்றை சர்வதேசத்துக்கும் முன்வைத்தன. மன்னார் சிவகரனின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட முன்முயற்சி மூலம் நீண்ட வாதப் பிரதிவாதங்கள், கூட்டங்கள், கருத்து மோதல்கள், ஆராய்வுகளின் பின்னர் தமிழ்த் தேசியத் தரப்புகள் ஒன்றிணைந்து, ஓர் இணக்க நிலைக்கு வந்தன.**

**பிரதான தமிழ்த் தேசியக் கட்சிகள் முத்தரப்பாகப் பிரிந்து நிற்கின்றன. ஒன்று – சம்பந்தன் தலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு; அடுத்தது – நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமையில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி; மூன்றாவது – கஜேந்திரகுமார் தலைமையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.**

**இந்த முத்தரப்பினரும், தமிழ் சிவில் சமூக அமைப்புககள், காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கம், மதத் தலைவர்கள் ஆகிய எல்லோரையும் அவரணைத்துக் கொண்டு ஒரு பொது நிலைப்பாட்டை எட்டி, அதை எழுத்து வடிவ ஆவணமாக சர்வதேசத்தின் முன் – ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் உறுப்பு நாடுகளுக்கு முன்பாக – வைத்த போது தமிழ்த் தேசியத்தில் ஈடுபாடு கொண்டுள்ள அனைவருமே மெய்சிலிர்த்துப் போனார்கள். இந்த இணக்க முயற்சிக்கு அதீத விட்டுக்கொடுப்புடன் முன்வந்த தரப்புக்களை எல்லோரும் மெச்சிப் பாராட்டினர்.**

**இந்த முயற்சி இப்படி 'சாண்' ஏறியதும், அதை மென்மேலும் தூக்கி விடுவதற்கான எத்தனத்தை மேற்கொள்வதை விடுத்து, 'முழம் சறுக்கும் கைங்கரியத்தை தமிழ்த் தேசியக் கட்சிகள் என்று கூறிக் கொண்டிருக்கும் சில வெட்டித் தரப்புகள் ஆரம்பித்திருக்கின்றன.**

**பத்துக் கட்சிகள் கூட்டம் என்ற பெயரில் மாவை சேனாதிராசா தலைமையில் ஒரு கூட்டத்தைக் கூட்டி, ஜெனிவாவைக் கையாள்வதற்கு ஏழு பேர் கொண்ட ஒரு குழுவையும் நியமித்திருக்கின்றார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் ஏற்கனவே தமிழ்த் தேசியத் தரப்புகளை ஒற்றுமைப்படுத்தி ஒரு நிலைப்பாட்டை எடுக்க வைத்த முயற்சியில் சம்பந்தப்பட்ட பிரதான பிரமுகர்கள் இந்த ஏழு பிரதிநிதிகள் – பிரகிருதிகள் – குழுவில் இல்லை.**

**அங்கு சாண் ஏறியதை, இங்கு முழம் சறுக்க வைக்கும் வேலையல்லவா இது?**

**மன்னார் சிவகரனின் எத்தனத்தில் முன்னெடுக்கப்பட்டு, அதன் மூலம் கிட்டிய ஒற்றுமைப்பட்ட நிலைப்பாட்டை எட்டி உதைக்கும் முயற்சியல்லவா இது?**

**முன்னைய முயற்சி வெற்றிகரமாக முன் நகர ஒத்துழைத்த ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் போன்றோரின் பெயரும் பின்னைய – சாண் சறுக்கச் செய்த – எழுவர் குழுவில் இருப்பது ஆச்சரியத்தைத் தருகின்றது.**

**ஆனாலும் சுரேஷ் பிறேமச்சந்திரன் போன்றோர் முன்னையதின் முக்கியத்துவத்தையும், இப்போது அறிவிக்கப்பட்ட ஏழு பேர் குழுவினால் உருவாகியுள்ள குழப்பத்தையும் விரைந்து புரிந்து கொண்டு, நிலைமையை சீர் செய்து, முன்னைய முயற்சியையே முன்கொண்டு செல்லத் தீர்மானித்துச் செயற்படுகின்றார்கள் என்ற பிந்திய செய்தியும் வெளியாகியிருக்கின்றது. அது பாராட்டக் கூடிய நடவடிக்கைதான்.**

# விமல் நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும்!

## சாகர காரியவசம் மீண்டும் வலியுறுத்தல்

பொதுஜன பெரமுன தலைமையில் கூட்டணியில் இருந்து கொண்டு அமைச்சர் விமல் வீரவன்ஸ குறிப்பிட்ட கருத்து வெறுக்கத்தக்கது. தவறை திருத்திக் கொள்வதை விடுத்து சமூகவலைத்தளங்கள் ஊடாக எமக்கு சேறுபூசுவது பயனற்றது.

விமல் வீரவன்ஸ நாட்டு மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும் என நான் குறிப்பிட்டமையைக் கட்சி தலைவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட உயர்மட்ட தலைவர்கள் எவரும் இது வரை நிராகரிக்கவில்லை.

அமைச்சர் விமல் வீரவன்ஸவின் குறுகிய நோக்கம் ஒருபோதும் நிறைவேறாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவம் தொடர்பில் அமைச்சர் விமல் வீரவன்ஸ குறிப்பிட்ட கருத்தைக் கடுமையாக எதிர்க்கிறோம். கட்சியின் தலைமைத்துவம் குறித்து தீர்மானிக்கும் அதிகாரம் அவருக்குக் கிடையாது. கூட்டணியில் இருந்துகொண்டு செய்த தவறை சுட்டிக்காட்டினோம். தவறை திருத்திக் கொண்டு மன்னிப்பு கோருகின்றமை பெருந்தன்மையான செயற்பாடாகும்.

தவறுக்கு மன்னிப்பு கோருகின்றமையை விடுத்து சமூக வலைத்தளங்கள் ஊடாக தேவையற்ற காரணிகளைக் குறிப்பிட்டு எமக்கு சேறு பூசுகிறார். இதனால் எவ்வித மாற்றமும் ஏற்படாது. குறுகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தோற்றம் பெறவில்லை என்பதைத் தெளிவாக அவருக்குக் குறிப்பிட்டுள்ளோம். கூட்டணி என்றால் கூட்டுப் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

கட்சித் தலைவர் கூட்டம் என்று குறிப்பிட்டுக் கொண்டு அமைச்சர் விமல் வீரவன்ஸ அவரது இல்லத்தில் இரண்டு முறை கட்சித் தலைவர்களை வரவழைத்து பேச்சை முன்னெடுத்துள்ளார். கட்சித் தலைவர் கூட்டம் இரகசியமான முறையில் அமைச்சரின் இல்லத்தில் வழமையாக இடம் பெறுவதில்லை. அந்தக் கூட்டத்தில் கூட்டணியில் உள்ள அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் கலந்துகொள்ளவில்லை. வேறுபட்ட தரப்பினர்கள் கலந்துக் கொண்டுள்ளார்கள். ஆகவே, அமைச்சர் விமல் வீரவன்ஸவின் நோக்கம் ஒருபோதும் நிறைவேறாது. - என்றார்.

# ஏப்ரல் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் அறிக்கை; ஆண்டகையின் சந்தேகம் அநாவசியமற்றது!

## இப்படிக் கூறுகிறார் அமைச்சர் பீரிஸ்



ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கை தொடர்பாக கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை சந்தேகம் கொள்கின்றமை அவசியமற்றது. குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் அனைவரும் தண்டிக்கப்படுவார்கள். குற்றவாளியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை அரசியல் இலாபம் கருதி அரசாங்கம் பாதுகாக்காது என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற ஊடவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் இருந்தவர்களை பகிரங்கப்படுத்தி அவர்களை சட்டத்தின் முன் முன்னிலைப்படுத்துவோம். என்ற வாக்குறுதியை பொதுஜன பெரமுன கொள்கைப் பிரகடனமாக வெளியிட்டது. நல்லாட்சி அரசாங்கம் தேசிய பாதுகாப்பைத் திட்டமிட்டு பல வீனப்படுத்தியமையை அடிப்படைவாதிகள் சாதகமாகப் பயன்படுத்தி தங்களின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டார்கள்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கை எந்தளவிற்கு உண்மைத் தன்மையுடன் காணப்பட்டது என்பது கேள்விக்குட்படுத்தப்பட்டது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாட்டை துரிதப்படுத்தினார்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணை தொடர்பாகத்தான் அதிருப்தியடைவதாக கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டுள்ளார். அதிருப்தியடைவது அவசியமற்றது என்றே குறிப்பிட வேண்டும். அரசாங்கத்தின் மீது வைத்த நம்பிக்கையை தொடர்ந்து பேணுவது அவசியமாகும்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் முழுமையாக செயற்படுத்தப்படும். அரசியல் நோக்கங்களை கருத்திற் கொண்டு எவரும் பாதுகாக்கப்பட மாட்டார்கள். என்பதை தெளிவாகக் குறிப்பிட்டுக் கொள்கிறேன். - என்றார்.

**GCE (Ordinary Level) Examination**
**Training question paper for students preparing**

**English Language**

Mr.N.Thuvaragan
HND in English Teacher
Mu/Chammalai Maha Vidyalayam T.P. 0770655766

## Part II

**Test 9**

**Underline the most suitable word for the blank in brackets. *The first one is done for you.***

Hundred years ago, (1).............Families............ (familiar, familiarize, families) were larger, working hours were longer and income (2)......................... (low, lower, lowest). Most fathers were in full time (3)......................... (employed, employ, employment) but there were little for women and those who helped in washing or sewing felt a sense of (4)......................... (shameless, shame, shameful). Most people lived in their own property without bathrooms, indoor toilets, electricity (5)......................... (or, nor, as) hot water. But, you could leave your home unlocked and see (6)......................... (everyone, everybody, everything) is safe on your return.

**Test 10**

**Read the following passage. In each line one word is incorrect and it is underlined. Write the correct word in the space provided. *The first one is done for you.***

Millions of years ago the elephant order was very large; there was many types, …**Were**..…..
both large, small, and even some with four tusks. Today the order is reduce to ……………
only two species, the African and Indian elephants. Elephants are the large of ……………
all landing animals. The African bush elephant is the greatest in size, with males ……………
growing up to 3.5 meters tall and weigh up to six tons. Elephants have just one ……………
enormous ridged molar (cheek tooth) in each half of the jaw, which is use for ……………
crushing food. When a molar wears up, it is replaced with another one from behind……………
it. An elephant is mature at 15 years and usually die at the age of 60. A cow ……………
elephant produces one offspring every two years. The elephant's trunk is a elongated…………..
nose. The elephant drinks by sucking up water with it's trunk. Although ……………..
elephants has poor eyesight, they have a keen sense of smell. If they move their ……………
trunks from side to side or raise them they are smelling out their surroundings.

**Test 11**

**Mr. Sunil Perera was driving his car to the office. A Police Officer stopped him and asked some questions from him. Write the questions that the police officer asked Mr. Sunil. You can begin the questions from the words given in the box. *The first one is done for you.***

| when, where, how long, who, what |
|---|

PO. : Good morning!
Sunil : Good morning! I wasn't driving too fast, was I?
PO. : Not really. May I have your driving license and ask a few questions?
Sunil : Yes, certainly. Here you are.



Cordination:- R.Muraliraj

PO. : (1) Where are you going?
Sunil : I am going to my office.
PO. : (2)....................................................................
Sunil : I left home half an hour ago.
PO. : (3)....................................................................
Sunil : Well, I am the owner of the car.
PO. : (4) ...................................................................
Sunil : I have had this car for three years.
PO : (5)....................................................................
Sunil : I have my office bag and lunch in the car. Mm.... Sorry, I have my laptop too in the back.
PO : (6)....................................................................
Sunil : I work in the education office. Why what's the problem?
PO : Last night a car has been stolen in the town. We are having a checkup. Here is your license. Thank you for your cooperation.
Sunil : You are welcome. Good bye!

**Test 12**

**Study the following dictionary page and fill in the blanks with suitable words**

**sanctity.** n. (pl. **sanctities**) 1 holiness. **2** the state of being very important and worthy of great respect: the sanctity of human life. ORI GIN Old French saintcite.

**sanctuary n.** (pl. **sanctuaries**) 1 a place of safety. **2** a nature reserve. **3** a place where in jured or unwanted animals are cared for. **4** a holy place. **5** the part of the chancel of a church con taining the high altar. ORIGIN Latin sanc tuarium.

**sanctum** /sangk-tuhm/ .n. (pl. sanctums) **1** a sacred place. **2** a private place. I ORIGIN Latin.

**sand**.n. **1** a substance formed of very fine par ticles resulting from the erosion of rocks, found in beaches, river beds, the seabed, and deserts. **2 (sands)** a wide area of sand. .v. **1** smooth with sandpaper or a sander. **2** sprinkle with sand. ORIGIN Old English.

**sandal** on a shoe with a pa part or straps attaching the sole to the foot. ORIGIN Greek sandalon 'wooden shoe'.

**sandalwood** on the sweet-smelling wood of an Indian or SE Asian tree. E ORIGIN sandal from Latin sandalum.

**sandbag** on a bag of sand, used for protection against floods or explosions. .v. **(sandbags, sandbagging, sandbagged)** protect with sandbags.

**sandbank** on a build-up of sand forming a raised bank in the sea or a river.

**sandbar** on a long, narrow sandbank.

**sandblast** v. roughen or clean with a jet of sand driven by compressed air or steam.

**sandboy** on (in phr. **as happy as a sandboy)** extremely happy or carefree. ORIGIN prob. first referring to a boy going around sell. ing sand.

**sandcastle** on a model of a castle built out of sand.

**sander** on a power tool used for smoothing a surface.

**sandman.** n. **(the sandman)** an imaginary man supposed to make children sleep by sprinkling sand in their eyes.

**sandpaper** on paper with sand or another rough substance stuck to it, used for smooth ing surfaces. .v. **(sandpapers, sandpaper ing, sandpapered)** smooth with sandpaper.

**sandpiper** on a wading bird with a long bill and long legs, found in coastal areas.

**sandpit** on. Brit. a shallow box or hollow con taining sand, for children to play in.

**sandstone** .n. rock formed of sand or quartz grains tightly pressed together.

**sandstorm** on a strong wind in a desert carrying clouds of sand.

**sandwich** .n. **1** two pieces of bread with a filling between them. **2** Brit a sponge cake of two or more layers with jam or cream between them. .v. 1 **(sandwich between)** insert between two people or things). **2 (sandwich to gether)** join (two things) by putting some thing between them. I ORIGIN named after the 4th Earl of Sandwich.

**sandwich board** .n. a pair of advertisement boards connected by straps by which they are hung over a person's shoulders.



கலைக்கதிர் Kalaikkathir
கிளாத்தாள்
பதினாறுகள் 17.02.2021 05

(1) A snack made of bread is a.....................................
(2) ..................................... is a common tree in South Asia.
(3) Animals move about freely without any danger in a.....................................
(4) ..................................... is used to smooth wood before polishing.
(5) A footwear with straps is called a.....................................

**Test 13**

**Fill in the blanks using the words given in the box. The first one is done for you**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| result | not | is | cut | catchment | of | addition | flow |
| by | providing | the | causing | to | becomes | people | |

The forest plays a significant role in the weather and climate of a country. The fertility of its soil (1)….is………… dependent on the rivers, which (2)........................ down from the hill country (3)........................ the plains, watering the fields, (4)........................ light and power for industries. (5)........................ must protect the rivers by (6)........................ cutting down trees in the (7)........................ areas. Forests protect the moisture (8)........................ the soil, the shade and (9)........................ soil layers. If trees are (10)........................ down rivers will run dry (11)........................ a severe drought. As a (12)........................ of human activities, the environment (13)........................ polluted. Water is polluted (14)........................ washing, bathing and with the (15)........................ of all kinds of waste matter. Air too is polluted by the smoke emitted by vehicles and factories.

**Test 14**

**Write a letter to a friend who recently joined your school from a distant area. She/he wants to stay with you and you obtained permission from your parents to let him/her stay after the school vacation.**

Include - Facilities you can provide
- What he/she needs to bring
- How you would spend the time

or

You are the secretary of the welfare society of your school. Due to frequent power cuts in your area functioning of the school activities have been interrupted.
Write a letter of complaint to the Ceylon Electricity Board.
Include - the damage caused to valuable equipment.
- waste of school time.
- the difficulties you had to face.

……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………



**Test 15**

**Read the following text and answer the questions given below it.**

Once upon a time, a boy who was called Binara lived in a small town which was a long distance from the sea. Binara read a lot of books about ships and their voyages to distant countries, and he always imagined himself in each of them.

When he was twenty, he decided that he wanted to become an officer in the Sri Lanka Navy, so he went to a place which trained young men for these jobs. There Binara enjoyed the lessons very much, especially the ones on a ship. He was also glad to do a lot of sports and exercises, and by far was the best as he had excelled at sports in his school. One day one of the teachers informed the new students that it was time for them to begin having swimming and diving lessons.

Binara arrived at the pool the next morning with the other students. He was looking forward to learning to swim.

The teacher arrived a minute later, and commanded those who could not swim to go into one group, those who could swim but not dive properly to go into a second group, and those who could both swim and dive well to go into a third one. Binara went into the second group. The teacher then told the students in the second group to go down the steps into the swimming pool one by one and swim to the other end. The first two obeyed, and neither of them had any trouble in swimming to the other end. Binara was the third in the line. He climbed down the steps, but as soon as he began to swim, he sank under the water.

When he did not come up again, the alarmed teacher jumped in and dragged him out while the other students cheered. Then the teacher said to Binara "Why ever didn't you join the group that can't swim?"

"Because I'd never even bathed in a pool before." He answered, "I didn't know whether I could swim or not."

1.Say whether the following statements are true or false by writing 'T 'or 'F' against each of them.
I. Binara lived in a village closer to the sea. (..............................)
II. He had travelled to many distant countries by sea. (..............................)
III. He trained young men in the Navy. (..............................)
IV. He was twenty years old when he joined the Navy. (..............................)
2.Which lessons did he enjoy most?
..........................................................................................................................................................
3. What was the group Binara joined at the swimming pool?
..........................................................................................................................................................
4. Write the phrase which says Binara was a good athlete in his school.
..........................................................................................................................................................
5. Find words from the passage which have the same meaning for the following.
I. pulled along forcefully........................................
II. shouted for joy........................................

**Test 16**

**Write on one of the following topics. Use about 200 words.**

(a) - The advantages and disadvantages of television.
(b) - An incident I shall never forget.
(c) -. Importance of water.
(d) - Complete the following story.
Once I was in a bus to get home after school. A young lady gave me a bag. I kept it on my lap…….

ந.சதாசிவ ஐயர்
(ஓய்வு பெற்ற மேலதிக பதிவாளர் நாயகம்)




# காணிப்பதிவாளரின் கடமைகளும் பொறுப்பும்

வரையறுக்கப்பட்ட சட்டங்களுக்கமைய சேவை யாற்றுவதே காணிப்பதிவாளரின் கடமை.

காணிப் பிரச்சினை தொடர்பாக பொது மக்களுக்குத் தெளிவுபடுத்தும் கட்டுரைத் தொடரில் காணிப்பதிவக செயற்பாடுகள், காணிப்பதிவாளரின் கடமைகள் தொடர்பில் பொதுமக்களும் அரச அதிகாரிகளும் நொத்தாரிஸ்மாரும் நொத்தாரிஸ் கடமையாற்றும் சட்டத்தரணிகளும் அரச காணிகளைக் கையாளும் அலுவலகங்களும் தெரிந்து கொள்ளும் வகையில் இக்கட்டுரை விரிகிறது.

காணிப்பதிவகம் ஒரு திறந்த அலுவலகமல்ல. எல்லோரும் தொடர்பு கொள்ளக்கூடிய அலுவலகமுமல்ல. தகவலறியும் சட்டமூலப்படி காணிப்பதிவகத்தின் பொதுவான நிர்வாக நடவடிக்கைகளை அறிந்துகொள்ள முடியுமே தவிர,காணிப்பதிவு தொடர்பில் கேட்டறிய முடியாது.

காணிப் பதிவகங்கள் உருவாக்கப்பட்டபோது ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டத்துக்கமைய காணிப்பதிவக செயற்பாடுகள் எப்படி அமைய வேண்டுமென அது தொடர்பான ஏற்பாடுகளில்(Regulations) விரிவாக கூறப்பட்டுள்ளமையுடன் காணிப்பதிவகத்தில் ஆற்றப்படும் செயற்பாடுகள் யாவும் அதற்கென தயாரிக்கப்பட்ட கையேடு மூலமே நடைமுறைப்படுத்தப்படுகிறது.

### அமைவு

ஆரம்பத்தில் மாவட்டத்துக்கு ஒன்று என அமைக்கப்பட்ட காணிப்பதிவகங்கள் தற்போது நாற்பத்தைந்தாக உயர்ந்துள்ளன. ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவும் காணிப்பதிவகத்தின் ஒரு பதிவுப் பிரிவாக - தனி அடையாளம் கொண்டதாக - இருக்கும். இதன் அடிப்படையிலேயே காணிப்பதிவேடுகள் பேணப்படும். ஒரு காணிப் பதிவகமானது தனது அதிகார எல்லைக்குள் அமைந்த காணிகள், தருமசாதனங்கள் மற்றும் அசையும் சொத்துக்கள் தொடர்பில் எழுதி தமது அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட உறுதிகளையும் அரச வழங்கல் பத்திரங்களையும் ஆவணப்பதிவுக் கட்டளைச் சட்டத்துக்கமைவாகவும் பதிவாளர்நாயகத்தின் சுற்றுநிருபங்களுக்கு அமைவாகவும் கையாளும் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரம் கொண்டதாகும். காணிப்பதிவக எல்லைக்குட்பட்ட காணிகள் தொடர்பான பதிவேடுகள் மற்றும் அவ்வெல்லைக்குள் தம்மைப்பதிவு செய்துகொண்ட பிரசித்த நொத்தாரிஸ்மாரின் உறுதிகளின் இணைப்பிரதிகள் என்பன சம்பந்தப்பட்ட காணிப்பதிவகத்தில் மட்டுமே பேணப்படும். காணிப் பதிவக அதிகார எல்லைக்குட்பட்ட காணிகள் தொடர்பில் காணிப்பதிவக எல்லைக்கு வெளியேயான நொத்தாரிஸ்மாரால் எழுதப்படும் உறுதிகளின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளும் பேணப்படும்.

### கடமைகள்

காணிப்பதிவாளரும் காணிப்பதிவக அலுவலர்களும் தமது கடமைகளை சட்டத்தால் வகுக்கப்பட்டவாறும் கையேட்டின் வழிகாட்டலின்படியும் அதற்கேற்றவாறான பதிவாளர்நாயக சுற்று நிருபங்களின்படியும் ஆற்றக்கடமைப்பட்டவர்களாவர். தன்னிச்சையாக செயற்படவோ அல்லது ஏனையவர்களின் வழிகாட்டல்களின்படியோ, வேண்டுகோளின்படியோ, அறிவுறுத்தலின்படியோ செயற்படவோ முடியாதவர்களாவர். அவர்களுடைய பதிவுகள், குறிப்புக்கள், எழுத்துக்கள், செயற்பாடுகள் யாவும் எப்படி அமையவேண்டுமென கையேட்டில் வகைப்படுத்தப்பட்டு கூறப்பட்டுள்ளன. அவர்களுடைய சகல நடவடிக்கைகளுக்கும் கீறிட்ட இடம் நிரப்பக்கூடிய வகையில் அச்சிடப்பட்ட பதிவேடுகள் மற்றும் படிவங்கள் மீதனதாகவே அமையும். அவர்களாக ஒரு கடிதம் எழுதும் தேவைக்கு இடமளிக்கப்படவில்லை.

### நொத்தாரிஸ் தொடர்பான கடமைகள்

தனது பிரிவுக்குள் வசிக்கும் பதிவாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட பிரசித்த நொத்தரிஸ் ஒருவர் தொடர்பில் -

1.நொத்தாரிஸ் ஒருவர் வருடந்தோறும் மேல்நீதிமன்றில் தனது அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்கின்றாரா? அனுமதிக்கப்பட்ட இடத்தில் அலுவலகத்தைப் அமைத்துள்ளாரா? அலுவலகத்தில் ஆவணங்களை முறைப்படி பேணுகின்றாரா? நொத்தாரிஸ் எழுதுனர் இருந்தால் முறைப்படி அனுமதி பெற்றுள்ளாரா? என கண்காணித்தல்.

2. உறுதிகளை அங்கீகரிக்கப்பட்டவாறு உரிய தாளில் உரிய அளவில் தெளிவாக தயாரிக்கின்றாரா? முறைப்படி வாராந்த, மாதாந்த அறிக்கைகளையும் இணைப்பிரதிகளையும் சமர்ப்பிக்கின்றாரா? முத்திரைக்கட்டணத்தை சரியாக செலுத்துகின்றாரா? மூலப்பிரதியிலும் இணைப்பிரதியிலும் பெறுமதி முத்திரைக்கட்டணம் என்பவற்றை சரியாக குறிப்பிடுகின்றாரா? -என அவதானித்தல்.

3. நொத்தாரிஸ் ஒருவரின் குறைபாடுகள், தவறுகள் தொடர்பில் காலந்தாழ்த்தாது உரிய படிவங்களில் உரிய விளக்கங்களை காலக்கெடுவுடன் கோருவதுடன் அது தொடர்பில் எச்சரிக்கை, தண்டப்பணம் அறவிடுதல் என்பனவும் மேற்கொள்ளவும் முடியும். தவறுகளின் தன்மை பாரதூரம் மற்றும் எண்ணிக்கையின் அடிப்படையில் அவருக்கெதிராக இறுக்கமான தண்டங்கள் பதிவாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்படுவதுடன் தேவையேற்படின் நீதிமன்றுக்கும் கொண்டுசெல்லப்படும். எனினும் அவரால் இழைக்கப்படும் மோசடி தொடர்பில் பொலிஸ், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக பதிவாளர் நாயகமும் விசாரணை செய்து அவரது அநுமதியை இரத்துச்செய்ய முடியும்.

### உரித்துடையோர்

காணிப் பதிவாளருடன் உறுதிகள், பதிவுகள் தொடர்பில் தொடர்புகொள்ள உரித்துடையோர்:- காணிப்பதிவக ஆவணங்கள் யாவும் பாதுகாப்பானவையாகும். அவற்றை பொதுவாக எவரும் பார்வையிடவோ, தேடுதல் செய்யவோ, பிரதிபெறவோ முடியாது. அலுவலகத்திற்கு உள்ளேயும் கூட பதிவேட்டறைக்கு பொறுப்பானவர்களன்றி ஏனய காணிப்பதிவக அலுவலர் எவரும் உள்ளே செல்லவோ ஆவணங்களை கையாளவோ முடியாது. உறுதி பதிதல், பதிவு பார்த்தல், தேடுதல் செய்தல், பிரதி பெறுதல் என்பவற்றை ஒரு நொத்தாரிஸ் அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட அவரது ஒப்பத்துடனான விண்ணப்பதுடன் அவரது எழுதுனர் ஆகியோரே கையாள முடியும். தமது காணி தொடர்பில் மட்டும் அதன் உரித்தாளரும் தனக்கு உரித்துண்டு என அக்கறைகொள்பவரும் தம்மை அடையாளப்படுத்தி உறுதிப்படுத்தி காணிப்பதிவக சிரேட்ட அலுவலர் ஒருவரின் மேற்பார்வையில் தேடுதல் செய்யவும், பார்வையிடவும், பிரதிபெறவும் முடியும்.

காணிப்பதிவகத்தால் வழங்கப்படும் பிரதிகளில் இப்பிரதி இன்னாரின் வேண்டுகோளின்படி வழங்கப்பட்டது எனக்குறிப்பிட்டே காணிப்பதிவாளர் ஒப்பமிடுவார். இதில் அனுபவமில்லாத ஒருவர் காணிப்பதிவாளர் அனுமதிக்கும் பட்சத்தில் தமது சார்பில் அனுபவமுள்ள நொத்தாரிஸ் எழுதுனர் ஒருவரின் உதவியை பெறலாம். தமது பெயருள்ள ஆவணத்தினதும் அதனோடு தொடர்புள்ள ஆவணங்களினதும் பிரதிகளை மட்டுமே பெற முடியும். இதன் அர்த்தம் என்னவெனில் பொதுவாக காணி தொடர்பான எந்தவொரு தேவையையும் பிரசித்த நொத்தாரிஸ் அல்லது நொத்தாரிஸ் எழுதுனர் ஒருவர் மூலமே இலகுவாக சட்டப்படி நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்பதாகும். நொத்தாரிஸினதும் பெறுமையாக இருந்து ஏடுகளையும் உறுதிகளையும் தேடும் அறிவும் அனுபவமும் உள்ள நொத்தாரிஸ் எழுதுநரதும் சேவை உங்கள் தேவையை இனங்கண்டு இலகுவாக நிறைவேற்ற உதவும் என்பதாலாகும். நொத்தாரிஸாக மட்டுமே கடமையாற்றுவோர் சேவையும் நொத்தாரிஸ் எழுதுனர் சேவையும் அருகிவிட்டதால் இவ்வசதியும் இப்போது அருகிவிட்டது.

### உறுதி பதிவு தொடர்பில் காணிப்பதிவாளரின் கடமைகள்

காணிப்பதிவாளர் சட்டத்தில் குறிப்பிட்டவாறு உரிய நேரத்தில் தின ஏடுகளை திறந்து உறுதிகளை சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு சமர்ப்பிக்கும் உரிமையுள்ளவர்களால் சமர்ப்பிக்குப்படும் ஒழுங்கில் நேரம், இலக்கம் குறித்து பாரமெடுத்து அந்த ஒழுங்கிலேயே பதிவும் செய்வார்.

தபால்மூலம் பெறப்படும் உறுதிகளை ஏட்டில் உள்ளிடப்படவேண்டிய நேரங்கள் கூட கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. சட்டத்தால் அவருக்கு விதிக்கப்பட்டவாறு குறிப்பிட்ட விடயங்களில் மட்டுமே கவனம் செலுத்துவதுடன் அவ்வாறு அமையாத சந்தர்ப்பங்களில் பதிவு செய்ய மறுப்பு தெரிவித்து (Refuse) உறுதியை திருப்பி அனுப்பிவிடுவார். மறுக்கப்பட்ட உறுதியை உரிய திருத்தத்துடன் காணிப்பதிவாளரூடாக பதிவாளர் நாயகத்துக்கு மேன்முறையீடு சமர்ப்பித்து அவரின் அனுமதிபெற்ற பின்பே பதிவு செய்யலாம். உறுதிகள் பதியும்போது அதன் உண்மைத்தன்மை பற்றி உறுதிப்படுத்திக்கொள்ளும் அல்லது ஆராயும் ஏற்பாடுகள், வழிகாட்டலகள் ஏதும் காணிப்பதிவாளருக்கு இல்லை. காணிப்பதிவாளர் பதிவேட்டு விவரங்களுடன் ஒத்துவராத உறுதியின் விவரங்களை ஏட்டின் குறிப்புப் பகுதியில் குறிப்பிடுவதுடன் அவரது பதிவுப்பணி நிறைவடைகிறது. மிக முக்கியமான விடயம் என்னவெனில் உறுதியில் குறிப்பிட்ட மேலதிக விடயங்களை அதில் குறிப்பிட்டுள்ள காரணத்தினாலோ நொத்தாரிஸினதோ திறத்தவர்களதோ அல்லது வேறு அக்கறையுள்ள நபரினதோ வேண்டுகோளின் பேரிலோ காணிப்பதிவாளர் பதிவேட்டில் உட்படுத்த மாட்டார். கையேட்டில் காட்டப்பட்ட மாதிரிகளுக்கு அமைவாக, சட்டத்துக்கு முரண்படாத வகையில், உசிதமான தேவையான விடயங்களையே சுருக்கமாக பதிவு செய்வார் .நாட்டின் எல்லா காணிப்பதிவகங்களிலும் பதிவுகள் யாவும் ஒரே தன்மையினதாக அமைவதில் அக்கறையுடையவராக இருப்பார். அதே போன்று காணிப்பதிவக ஆவணங்களை தேடுதல் செய்தல், பார்வையிடல், பிரதி பெறுதல் தொடர்பில் பொறுப்பான அலுவலர்களின் முன்னிலையில் உரிய மேசையில் வைத்து பார்வையிடவும் பிரதி பெறவும் உரித்துள்ளவர்களுக்கு உரிய வசதிகள், போதிய இடவசதிகள் காணிப்பதிவகங்களில் இருக்கும்.

### நீதிமன்ற நடவடிக்கைகள்

நொத்தாரிஸ் கட்டளைச் சட்டப்படி செயற்படத் தவறும் நொத்தாரிஸ்மாருக்கு எதிராக நீதமன்றில் வழக்குத்தாக்கல் செய்தல் மற்றும் காணி தொடர்பான வழக்குகளில் நீதிமன்றம் கோரும்பட்சத்தில் காணிப்பதிவேடுகளையோ உறுதிகளையோ உறுதிப்படுத்திக் கொள்ளலுக்காகவும் பார்வையிடுவதற்காகவும் மட்டும் காணிப்பதிவக அலுவலர் ஒருவர் மூலம் மன்றில் சமர்ப்பிப்பதும் காணிப்பதிவாளரின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும்.

### அலுவலர்களுக்குள்ள பாதுகாப்பு

காணிப்பதிவாளருக்கும் காணிப்பதிவக அலுவலர்களுக்குமுள்ள பாதுகாப்பு விவரம் வருமாறு:-

காணிப்பதிவகத்தில் உறுதிகள் பதியும்போது அலுவலர்களால் விடப்படும் தவறுகள் பதிந்து முடிந்தபின் கண்டுபிடிக்கப்பட்டால் அதனை திருத்துவதற்கும் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தவறுகளைச் சுட்டிக்காட்டி காணிப்பதிவாளருக்கு விண்ணப்பித்தால் கட்டணங்கள் ஏதுமின்றி பதிவாளர்நாயகத்தக்கு முறையீடு செய்து, அனுமதிபெற்று திருத்துவது காணிப்பதிவாளரின் கடமையாகும்.

காணிப்பதிவகத்தில் கடமையாற்றும் அலுவலர்களால் பதிவு செய்தல், பிரதி வழங்கல் நடவடிக்கைகளின்போது ஏற்படும் மோசடி தவிர்த்த கைத்தவறுகள் தொடர்பில் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இது பற்றி காணிப்பதிவகத்தில் பாவிப்பிலுள்ள சகல விண்ணப்பப்படிவங்களின் இறுதியிலும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

காணிப்பதிவாளர் மற்றும் காணிப்பதிவக அலுவலர்கள் கண்ணியமாகவும், நேர்மையாகவும், நல்ல பண்புடனும், நல்ல நடை,உடை பாவனையுடனும் கடமையாற்றக் கடமைப்பட்டவர்கள் ஆவர். சமுதாயத்தில் மதிப்பு மிக்க உயர் பதவி வகித்த நீதிபதிகள், அரச அதிகாரிகள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு பிரசித்த நொத்தாரிஸாகத் தம் கடமையை ஆற்ற அடிக்கடி வருகின்ற ஒரே அலுவலகம் காணிப்பதிவகமாகத்தான் இருக்கும். சுருக்கமாக சொல்வதானால் ஒரே வேலையை ஒரே ஒழுங்கில் அவதானமாகவும் பொறுப்புடனும் நேர்மையாகவும் பக்கச்சார்பற்ற முறையிலும் எவருக்கும் கட்டுப்படாமலும், சட்டப்படி தூய்மையாக செய்வதே காணிப்பதிவாளரினதும் அலுவலர்களினதும் கடமையாகும்.

தெல்லியூர் சி.ஹரிகரன்




# கீரிமலையின் பெருமை பேணுவோம்!

'ஏழுவா இளமையும் காட்டி முதுமை அழகுங் காட்டி காலந்தோறும் சிறந்து நிற்கும் ஒப்பற்ற மதமாம் இந்து மதம்.' இந்த இந்துமதத்தின் அடிநாதமாக ஈழத்தின் வடபகுதி யாழ்ப்பாணக் குடாநாடு சைவப் பாரம்பரியத்து டன் வரலாற்றுப் பிரசித்திபெற்று விளங்கிற்று. ஆறுமுக நாவலரால் ஈழத்தைச் 'சிவபூமி' என்று அழைக்கப்பட்ட பெருமையும் இந்த மண்ணுக்குண்டு.

நான்கு புறமும் கடலால் சூழப்பட்டு, அந்தக் கடற்கரையில் ஓங்கியெழுகின்ற பேரலைகள் அதன் கரையினை முத்தமிட்டு வெண்ணிறநுரை பரப்புகின்ற அழகிய சிறப்புமிகு பெருமை கீரிமலைக்குண்டு. நகுலகிரி முனிவரின் கீரிமுகம் நீங்கப்பெற்றமலையால் 'கீரிமலை' என இந்தப் பிரதேசம் பெயர்பெற்றதாக இதிகாச வரலாறுகள் சான்று பகர்கின்றன.

வடக்கில் பிதிர்க்கடன் செலுத்தும் புனித தீர்த்தக்கரை இங்கு அமைந்துள்ளது. கீரிமலை, கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம் பகுதிகளை இணைத்து 'கோவிற்கடவை' என்றொரு பெயரும் முன்னொரு காலத்தில் இருந்ததாகவும் புராண இதிகாச வரலாறுகள் கூறுகின்றன.

கீரிலை பிரதேசத்துக்குள் கால்பதித்தாலே சிவ உணர்வு எம் எம் சிந்தையில் பதியும். இந்தக் கிராமத்தின் பிரசித்தி பெற்ற ஆலயங்களாக நகுலேச்சரம், கடற்கரைச் சித்தி விநாயகர் கோயில், மாரியம்மன் கோயில், குழந்தைவேற்சமாதிச் சிவாலயம், சுப்பிரமணியர் ஆலயம், காசி விசுவநாதர் கோயில் என்ற ஆலயங்களும் கிழக்கு எல்லையில் மாவிட்டபுரம் என்ற பிரசித்திமிக்க ஆலயமும் உள்ளன. வடக்கில் பாக்குநீரிணைக் கடல் உள்ளது.


இங்கு பிதிர்க்கடன் செலுத்த வருவோரும், தம் குறைகளைய சிவனை நாடி வரும் அடியார்களுக்கு அவர்கள் வயிறாறி, இளைப்பாறிச் செல்ல நகுலேஸ்வரர் ஆலயச் சூழலில் கடற்கரைக்கு அருகில் சிறாப்பர் மடம், வைத்தியலிங்கம் மடம், கிருஷ்ணபிள்ளை மடம், பிள்ளையார் கோயில் மடம், நாராயணபூடர் புண்ணிய தரும மடம், துறவிகளாச்சிரமம் என ஆறு மடங்கள் சிறப்புற அமைந்துள்ளன.

துரதிர்ஷ்டவசமாக ஏற்பட்ட யுத்தப் பாதிப்புக்களால் இந்த மடங்கள் முழுமையுமாக அழிவுற்றன. எமது வரலாற்றுச் சின்னங்கள் அழிந்தன. ஈழத்து பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான நகுலேஸ்வரர் ஆலயமும் பாரிய அழிவை எதிர்கொண்டது. யுத்தம் நிறைவடைந்தபின் பிதிர்க்கடன் செலுத்துவதற்காக கீரிமலைக்குச் செல்வோர் இளைப்பாற ஓர் இடமின்றிப் பெரிதும் தவித்தார்கள். சிரமப்பட்டார்கள். சிவனிடம் நொந்து, மெய்யுருகித் தமது குறைகளை ஒப்புவித்தார்கள். இலங்கையின் ஆட்சி மதம் அங்கு கோலோச்ச முற்பட்டது. பாரம்பரிய சைவ வரலாறு திரிபுபடுத்தப்படுமோ என்ற அச்சம் இந்துக்கள் மனதில் ஆழ வேரோடியது.

இந்த நிலையில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் காலடியில் பிறந்து வெறும் 32 வருடங்கள் வாழ்ந்த ஆதிசங்கராச்சாரியார் பூரி, காஞ்சி, சிறுங்கேரி, துவாரகை ஆகிய இடங்களில் நான்கு மடங்களை நிறுவி, 6 மதங்கள் நிறுவி, 10 உபநிடதங்களுக்கு உரை எழுதி, சிவன்மீது சிவானந்த லகரி, சக்திமீது சௌந்தர்ய லகரி, விஷ்ணுமீது பஜ கோவிந்தம், முருகன் மீது ஸ்ரீ சுப்ரமன்ய புஜங்கம், விநாயகர் மீது கணேச பஞ்சாட்சரம் பாடி சாதாரண மனிதர்களால் சாதிக்கமுடியாத சாதனைகளையும் போதனைகளையும் ஆற்றி சைவத்தைக் காத்தார்.

ஆதிசங்கரர் போன்று ஈழத்தில் அவதரித்த கலாநிதி ஆறு.திருமுருகன் சைவசமயத்தை ஒட்டி பல கட்டமைப்புகளை ஒரேசமயத்தில் நிறுவி, அவற்றை வெற்றிகரமாகச் செயற்படுத்தி, நம் மதத்தின் பின்னடைவிலிருந்து அதனைக் காக்க ஆக்கபூர்வமான பல பணிகளை சளைக்காது முன்னெடுத்து வருகின்றார்.

கீரிமலையின் அவலநிலையைக் கண்ணுற்ற கலாநிதி ஆறு.திருமுருகன் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் எதிர்நீச்சலிட்டு, தனது நண்பர் – ஜனாதிபதி சட்டத்தரணி அமரர் நீலகண்டனின் துணையுடன் 2012 ஆம் ஆண்டு கீரிமலையில் ஓய்வுநிலை ஆசிரியர் அமரர் விஸ்வநாதன் குடும்பத்தினரால் வழங்கப்பட்ட காணியில் சைவமணம் பரப்பும் சிவபூமி மடத்தை 4 மாத கட்டுமானப் பணிகளுடன் பிரமாண்டமாக நிறுவினார். பிறமதப் பிரசன்னத்தைத் தகர்த்தார். அதன்பின் யாத்திரிகர் விடுதியை உருவாக்கினார். அந்தப் பிரதேசத்தை சைவ மணங்கமழும் புண்ணிய சைவபூமியாக மீள உருவாக்கினார்.



அந்த சிவபூமி மடத்தின் ஊடாக ஞாயிறு பௌர்ணமி குருபூசை நாள்களின் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகின்றது.

பாடசாலை மாணவர்கள் சமய நிறுவனங்கள் யாத்திரையாக வரும் போது தங்குவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

சிவலிங்கப்பெருமான் நடராசப்பெருமான்மடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு தினமும் உணவு படைத்து வழிபாடு நடைபெற்றுவருகின்றது.

அந்தியேட்டி கிரியை செய்யவரும் தூர இடத்து அன்பர்கள்ஆறுதல் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது, அங்கு அழிவடைந்த கிருஷ்ணபிள்ளை மடம் இருந்த இடத்தை, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஓய்வுநிலை அதிபர் அமரர் கிருஷ்ணபிள்ளையின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் வழங்கப்பட்ட 19 பரப்புக் காணியில் ஆதரவற்ற – பிள்ளைகளால் கைவிடப்பட்ட – முதியவர்களுக்காக முதியோர் இல்லம் அமைக்கப்பட்டு பங்குனி மாதம் திறந்துவைக்கப்பட உள்ளது. எத்தனையோ எழுத்தாளர்கள், கல்விமான்கள் கூட வாழும்போது பெருமையுடன் வாழ்ந்தவர்கள் முதுமையில் அநாதரவாக ஆதரவற்றுத் தவிக்கின்ற நிலைமையில் அவர்களின் ஆதரவுக்கு கரம் கொடுப்பதற்காக – அவதியுறும் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த பெரியவர்களுக்காக – இந்த முதியோர் இல்லம் கீரிமலையில் அமையவுள்ளது. சுழிபுரத்திலும் சிவபூமி முதியோர் இல்லம் 78 முதியவர்களுடன் சிறப்பாக சேவையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நான் ஆரம்பத்தில் ஆதிசங்கரவை உவமித்தமை போன்று குறுகிய வட்டத்தில் கலாநிதி ஆறு.திருமுருகன் நின்றுவிடாமல் அவரால் கீரிமலை சிவபூமி மடம், கீரிமலை யாத்திரிகர் விடுதி, சிவபூமி முதியோர் இல்லம், கோண்டாவில் மனவிருத்திப் பாடசாலை, கிளிநொச்சி மனவிருத்திப் பாடசாலை, நாவற்குழி அரும்பொருட் காட்சியகம், குப்பிளான் ஞான ஆச்சிரமம், மயிலிட்டி ஞான ஆச்சிரமம், இயக்கச்சி நாய்களின் சரணாலயம், நாவற்குழி திருவாசக அரண்மனை, திருகோணமலை மனவிருத்திப் பாடசாலை, சிவபூமி திருமூலர் மூலிகைத் தோட்டம், சிவபூமி கலைக்களஞ்சியம், சிவபூமி கல்வி நிதியம், சிவபூமி வாழ்வாதார நிதியம், சிவபூமி மருத்துவ நிதியம், ஆனைக்கோட்டை அபயம் வைத்தியசாலை, சுன்னாகம் சிவபூமி வைத்தியசாலை, சிவபூமி தொழிற் பயிற்சி நிறுவனம் என்பன நிர்வகிக்கப்படுகின்றன.

ஆனாலும், 'காய்த்த மரம் அது மிகை கல்லடிபடும்' என்பது சித்தர் வாக்கு. கீரிமலையின் வரலாறு திரிபுபடக்கூடாது அங்கு சைவமும் தமிழும் வாழவேண்டும் என்பதற்கு கலாநிதி ஆறு.திருமுருகன் எவ்வளவு பாடுபடுகின்றாரோ, எமது மதத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் – மதத்தை வழிநடத்தும் மதகுருமார்களே – அதனை புனிதபூமியாக அறிவிக்கவேண்டும் – நகர அபிவிருத்தி அதிகார சபைக்குக் கீழே அந்தப் பிரதேசத்தை மாற்றவேண்டும் – என்பதற்கான காய்நகர்த்தல்களை பெரும்பான்மை ஆட்சியாளர்களுக்குத் தமது விசுவாசத்தைக் காட்டவேண்டும் என்பதற்காக உழைக்கின்றார்கள்.

இந்து சைவ மக்கள் இந்த நேரத்தில் விழிப்புடன் செயற்படவேண்டும். பேர்சிவல் பாதிரியாரின் கோரிக்கைக்கு அமைய ஆறுமுகநாவலர் பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்துவிட்டு, தன் அறியாமையால் நொந்து, துவண்டு, அதன்பின் தன் மத அழிவைத் தடுத்துநிறுத்த இந்தியாவிலிருந்து அச்சு இயந்திரம் கொண்டுவந்து, திண்ணைப்பள்ளிக்கூடங்களை நிறுவி சைவத்தையும் தமிழையும் காப்பாற்ற எவ்வளவு சிரமப்பட்டாரோ அதே போன்ற சிரமம் இந்த விடயத்திலும் நமக்கு ஏற்பட நாம் இடமளிக்கக்கூடாது. நாம் விழிப்பாக இருந்து எமது பிரதேசங்கள் சூறையாடப்பட்டு, எமது வரலாறுகள் திரிபுபடுத்தப்படுகின்றமையைத் தடுப்போமாக! வெள்ளம் வந்தபின் அணை கட்டுவது முட்டாள்தனம் அல்லவா?



# மட்டு மக்களின் குடிதண்ணீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு பெற்றுத்தரப்படும் என உறுதி!

## இராஜாங்க அமைச்சர் சனத் நிசந்த வழங்கினார்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்குப் பாதுகாப்பான குடிதண்ணீரை வழங்கும் பிரச்சினைக்கு தீர்வினை பெற்றுக்கொடுக்கும் நடமாடும் சேவையொன்று கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு அரசடி தேவநாயகம் மண்டபத்தில் இடம் பெற்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் பால் நாட்டை கட்டியெழும்பும் திட்டத்துக்கு அமைவாக இலங்கையில் இருக்கும் அனைவருக்கும் சுத்தமான குடிதண்ணீரை வழங்கும் நோக்கில் மட்டக்களப்பில் இடம்பெற்ற இந்த நடமாடும் சேவை கிராமிய பொருளாதார மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

கிராமப்புற மற்றும் பிராந்திய குடிதண்ணீர் விநியோகத் திட்டங்கள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சனத் நிசந்த பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் உட்பட்ட அமைச்சின் உயரதிகாரிகளும், பிரதேச செயலாளர்களும், உதவிப் பிரதேச செயலாளர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் சிரமத்தை எதிர்கொண்டு வரும் கிராமங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும், தனிநபர்களும் தமது விண்ணப்பங்கள் மற்றும் கோரிக்கைகளை இராஜாங்க அமைச்சரிடம் முன்வைத்தனர். இவற்றில் அநேகமான கோரிக்கைகளுக்கு அந்த இடத்திலேயே தீர்வு வழங்கப்பட்டதுடன், தமது அமைச்சில் போதியளவு நிதி இருப்பதாகத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் மாவட்டத்தில் உள்ள குடிதண்ணீர்த் தேவை அனைத்தையும் ஒரு திட்ட வரைவாகத் தருமிடத்து அவற்றிற்கான தீர்வை தான் வெகு விரைவாக வழங்குவதாக உறுதியளித்தார்.

## கொரோனா சடலங்கள் தகனம் தகனம்தான்!

### அரசு மூர்க்கத்தனம்

கொவிட் மரணங்களைத் தகனம் செய்யும் தீர்மானத்தில் மாற்றம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாவால் மரணிப்போரின் சடலங்களைத் தகனம் செய்வதற்கு முஸ்லிம் சமூகமும், சர்வதேச ரீதியாகவும் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டிருந்த நிலையில், தற்போது, கொரோனாவால் மரணிப்போரின் சடலங்களைத் தகனம் செய்யும் தீர்மானத்தில் மாற்றமில்லை யென அமைச்சரவை இணைப் பேச்சாளர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கையிலேயே, மேற்படி தீர்மானத்தை அமைச்சரவை இணைப்பேச்சாளர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

## 24 மணித்தியாலத்தில் 8 விமான சேவைகள்!

நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் மொத்தம் 08 பயணிகள் விமான சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவற்றின் மூலமாக மொத்தம் 201 பயணிகள் தமக்கான சேவைகளை பெற்றுக் கொண்டுள்ளனர் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி இந்தக் காலக் கட்டத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கிய 06 விமானங்களின் மூலமாக 127 பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

கட்டார், டோஹாவிலிருந்து இரு விமானங்கள் மூலமாக நாட்டை வந்தடைந்த 102 பயணிகளும் அவற்றுள் அடங்குவர்.

இவ்வாறு நாட்டை வந்தடைந்த அனைவரும் இலங்கை இராணுவத்தினரால் தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதேவேளை இந்தக் காலக் கட்டத்தில் 02 விமானங்களின் மூலமாக கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து 74 பயணிகள் நாட்டை விட்டு புறப்பட்டும் உள்ளனர்.

மேலும், இந்தக் காலகட்டத்தில் 83 ஆயிரம் கிலோ கிராம் எடையுள்ள பொருள்கள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளமையுடன், 3 லட்சத்து 16 ஆயிரம் கிலோ கிராம் எடையுடைய பொருள்கள் விமான நிலையத்திலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டும் உள்ளன என விமான நிலைய அதிகாரிகள் கூறினர்.

## குடும்பத்தரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு!

வவுனியா ஈச்சங்குளம் பகுதியில் கிணற்றிலிருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த குடும்பஸ்தர் கடந்த ஞாயிற்றுக்கிழமை வீட்டில் இருந்துள்ளார். இதன்போது அவரது வீட்டுக்கு அருகில் உள்ள உறவினர் வீட்டில் இரவு முரண்பாடு ஏற்பட்டுள்ளமையை உணர்ந்து அங்கு ஓடிச் சென்றுள்ளார்.

இதன்போது குறித்த பகுதியில் நின்றிருந்த மரத்துடன் தவறுதலாக மோதி அருகிலிருந்த கிணற்றிற்குள் விழுந்து நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் ஈச்சங்குளம் பகுதியைச் சேர்ந்த வேலாயுதம் விஜயகுமார் (வயது 41) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

## நாவலப்பிட்டியில் ஓட்டோ விபத்து: ஒருவர் சாவு; மற்றொருவர் காயம்!

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் ஓட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளார்.

நாவலப்பிட்டி ஹரங்கல பகுதியிலிருந்து கொத்மலை பகுதிகளுக்குச் சென்றுக்கொண்டிருந்த குறித்த ஓட்டோ நேற்று மாலை ஹரங்கல – கொத்மலை நீர்தேக்க பிரதான வீதியில் ரத்மிலபிட்டிய பகுதியில் வீதியை விட்டு விலகி இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஓட்டோ வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாததன் காரணமாகவே இந்த விபத்து நேர்ந்துள்ளதாக விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் ஹரங்கல பகுதியைச் சேர்ந்த ஆர்.எம்.புத்திக்க (வயது – 30) என அடையாளம் காணப்பட்டுள்ளார். உயிரிழந்தவரின் சடலம் நாவலப்பிட்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பிரேத பரிசோதனைகளின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

படுங்காயமடைந்த மற்றவர் நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். இவ்விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நாவலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## தொற்றுக்குள்ளான யாழ்.பல்கலைக்கழக மாணவி பரீட்சை எழுத விசேட ஏற்பாடு!

கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், யாழ்ப்பாணம் கல்வியியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கொவிட் 19 சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்றுவரும் யாழ். பல்கலைக்கழக கலைப் பீட மாணவி தனது ஆண்டு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விசேட ஏற்பாடுகளைப் பல்கலைக்கழக நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.

பதுளையைச் சேர்ந்த கலைப்பீட மாணவி ஒருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகிய நிலையில், கடந்த வாரம் அடையாளப்பட்டிருந்தார். அதனையடுத்து அவர், யாழ்ப்பாணம் கல்வியியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கொவிட் 19 சிகிச்சை நிலையத்தில் அனுமதிக்கப்பட்டு அவருக்குச் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி பல்கலைக்கழகத்தின் ஆண்டு இறுதிப் பரீட்சை அவருக்கு நேற்று செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளது. அந்த மாணவியின் சக மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றும் அதே நேரத்தில், சிகிச்சை நிலையத்தில் அந்த மாணவியும் பரீட்சை எழுதுவதற்கான ஏற்பாடுகளைப் பல்கலைக்கழக நிர்வாகம் மேற்கொண்டிருந்தது.

பல்கலைக்கழகத் துணைவேந்தரின் அறிவுறுத்தலுக்கு அமைய, கலைப் பீடாதிபதி இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். குறித்த மாணவியின் பரீட்சைக்குத் தேவையான சகல ஏற்பாடுகளையும் சிகிச்சை நிலையத்தினுள் மேற்கொள்வதற்கு யாழ்ப்பாணம் கொவிட் 19 சிகிச்சை நிலைய நிர்வாகம் ஒத்துழைப்பை வழங்கியுள்ளது.

## மேலும் 14 நாள்கள் பிரசாந்தனுக்கு மறியல்!

(மட்டக்களப்பு நிருபர்)

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தனை மேலும் 14 நாள்களுக்குத் தடுப்புக் காவலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி ரிஸ்வான் உத்தரவிட்டுள்ளார் .

கொரோனா அச்சம் காரணமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பூ.பிரசாந்தன் மீதான வழக்கு விசாரனை நேற்று இணையவழி மூலம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த விசாரணையின் போது மேலும் 14 நாள்களுக்கு எதிர்வரும் 01.03.2021 வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆரையம்பதியில் 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டைப் படுகொலை தொடர்பில், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த அவர், ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த வழக்கின் சாட்சியங்களை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய பிரசாந்தன் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information



மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் தானிய வகைகளில் உளுந்து முக்கிய இடத்தை வகிக்கிறது. தோசை, இட்லி, வடை, பப்படம், முறுக்கு என தமிழர் சமையலில் உளுந்து ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. உளுந்து தெற்காசியாவைப் பூர்வீகமாகக் கொண்டது.

பெப்ரவரி, மார்ச் மாதங்களில் உளுந்து செய்யலாம்.தண்ணீர் தேங்காத செம்மண் வகைகள் ஏற்றது.

நிலத்தை நன்கு உழவு செய்து சமன்படுத்த வேண்டும். ஒரு ஏக்கருக்கு 20 கிலோ விதை போதுமானது.

விதைகளை 30X 10 செ.மீ இடைவெளியில் மானாவாரியாக விதைக்க வேண்டும்.

காலநிலை மற்றும் மண்ணின் தன்மைக்கேற்ப 10 முதல் 15 நாள்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

பயிரின் எல்லா நிலைகளிலும் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அறுவடை - முதிர்ந்த காய்களைப் பறித்து உலர்த்த வேண்டும். அறுவடை செய்யும்போது பயிர்களை வேரோடு பிடுங்க வேண்டும். இல்லையெனில் முழு தாவரத்தையும் வெட்டி எடுக்க வேண்டும். பின்னர் குவித்து வைத்து உலர்த்தி பயிர்களை பிரிக்க வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு 600 - 700 கிலோ வரை கிடைக்கும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர்
Kalaikkathir

# திருக்கேதீஸ்வரம் ஆலய மஹா சிவராத்திரி விழாவில் மன்னார் மாவட்ட மக்கள் மாத்திரம் பங்கேற்க அனுமதி

## மாவட்ட அரச அதிபர் தலைமையிலான கூட்டத்தில் தீர்மானம்



மன்னார், பெப்.16

மன்னார் மாவட்டத்திலுள்ள திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் இம்முறை மஹா சிவராத்திரியின்போது வெளி மாவட்டங்களில் இருந்து வருவோருக்கு அனுமதி வழங்காதிருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பரவும் கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில்கொண்டு மன்னார் மாவட்ட மக்களுக்கு மாத்திரம் சிவராத்திரி விழாவின்போது அங்கு வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்குவதற்கு மாவட்ட அரச அதிபர் திருமதி ஏ. ஸ்ரான்லி டி மேல் தலைமையில் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் வழமையாக மஹா சிவராத்திரி விழா வெகு சிறப்பாக நடைபெறுவதுடன், அதில் நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் இருந்து பெரும் எண்ணிக்கையிலானோர் கலந்துகொள்வர்.

ஆனால், இம்முறை அவ்வாறாக வெளிமாவட்டங்களைச் சேர்ந்தோரை அனுமதிப்பது சிக்கலானது என்று நேற்றைய கலந்துரையாடலில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதன்படி எதிர்வரும் மார்ச் மாதம் 11ஆம் திகதி மஹா சிவராத்திரி விழாவை சுகாதார முறைமைகளைப் பின்பற்றி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மஹா சிவராத்திரி அன்று நடத்தப்படும் பாலாவி தீர்த்தக் காவடி நிகழ்வை இம்முறை நடத்தாதிருக்கவும் இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் திணைக்களத் தலைவர்கள், திருக்கேதீஸ்வர ஆலயப் பிரதம குருக்கள், ஆலய நிர்வாக சபையினர், பொலிஸார் மற்றும் சுகாதாரத்துறையினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அடுத்த மாதம் முதல் வாரம் எம்.பியாகின்றாராம் ரணில்

மன்னார், பெப்.16

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமைக்காக கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதத்தின் முதல் வாரத்தில் நாடாளுமன்றத்தில் பதவியேற்கவுள்ளார் என்று கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமைக்காக அவரைப் பெயரிட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

எனினும், ரணில் விக்கிரமசிங்கவின் தீர்மானம் கிடைக்கும் வரையில் அந்த நடவடிக்கை தாமதமடைகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தநிலையில், இந்த மாத இறுதிக்குள் குறித்த தீர்மானம் கட்சிக்கு அறியப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில், பொதுமக்கள் வாக்களிப்பின் மூலம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆசனம் எதுவும் கிடைக்கவில்லை.

எனினும், கிடைக்கப்பெற்ற வாக்குகளின் அடிப்படையில் ஒரே ஒரு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமை மாத்திரம் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்தது. அந்தத் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமைக்காக, பலரின் பெயர்கள் முன்னதாக முன்மொழியப்பட்ட நிலையில், அது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்வதற்காக கட்சியின் செயற்குழு பல தடவைகள் கூடின.

எனினும், அந்தச் சந்தர்ப்பங்களில் தேசியப்பட்டியல் தொடர்பில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள முடியாமல் போனதுடன், கட்சியை மறுசீரமைப்பு செய்வது குறித்து அதிக அவதானம் செலுத்தப்பட்டது. இவ்வாறான பின்னணியில் அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிகளுக்குப் புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமைக்காகக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைப் பெயரிட வேண்டும் என்றும் இணக்கம் காணப்பட்டிருந்தது. இதன்படி, அது குறித்து கட்சித் தலைவரின் கருத்து கோரப்பட்டுள்ள நிலையில், அவரின் தீர்மானம் கிடைத்ததை அடுத்து, அதனைச் சபாநாயகருக்குப் பெயரிட்டு அனுப்புவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

# பேரணியில் பங்கேற்ற மனோவிடம் வாக்குமூலம் பெற்றனர் பொலிஸார்

மன்னார், பெப்.16

வடக்கு, கிழக்கு தமிழ்பேசும் சமூகத்தினரால் முன்னெடுக்கப்பட்ட பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான நீதிக்கான பேரணியில் கலந்துகொண்டு, சட்டத்தை மீறியுள்ள குற்றச்சாட்டின் பேரில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனிடம், பொலிஸார் இன்று வாக்குமூலம் பெற்றனர்.

இது தொடர்பில் மனோ கணேசன் தனது முகநூலில் பதிவிட்டுள்ள பதிவு வருமாறு:-

பொத்துவில் - பொலிகண்டி பேரணியில் கலந்துகொண்டு சட்டத்தை மீறினேன் என்ற குற்றச்சாட்டின் பேரில் எனது வாக்குமூலத்தைப் பெற வேண்டும் என ஸ்ரீலங்கா பொலிஸ் (எனது காவலர் மூலமாக) எனக்கு அறிவித்தது.

வீட்டுக்கு வந்து வாக்குமூலம் பெறுங்கள். நேரம் தருகின்றேன் என்று கூறியிருந்தேன்.



அதற்கிணங்க பொலிஸார் இருவர் வீட்டுக்கு வந்தார்கள். சுவையான தேநீரும், இறுக்கமான வாக்குமூலமும் கொடுத்தேன்.

மாங்குளம் பொலிஸ், முல்லைத்தீவு நீதிமன்றத்தில் AR154/21 என்ற இலக்கத்தின் கீழ் பெற்றதாகக் கூறப்படும் தடையுத்தரவை நான் பெப்ரவரி 6ஆம் திகதி மீறினேன் என்பதே குற்றச்சாட்டு.

எழுத்து மூலமாகப் பொலிஸுக்கு நான் கொடுத்த வாக்குமூலம் ஊடகங்களுக்கு விரைவில் வெளியிடப்படும்.

நம்மகிட்ட மறைக்க, ஒளிக்க ஏதும் இல்லப்பா என்று வீடு தேடி வந்த சி.ஐ. பரணகம, கான்ஸ்டபிள் நிஷங்க ஆகியோரிடம் சொன்னேன்.

முறிகண்டியில் அன்று பொலிஸ் பதிவு செய்த எனது உரையையும் இவர்களுக்கு இன்று போட்டுக் காட்டினேன் - என்றுள்ளது.

# விமலின் இல்லத்தின் மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்படும் எனப் பொலிஸாருக்கு அழைப்பு

## பல கோணங்களில் விசாரணை ஆரம்பம்

ஆளுந்தரப்பான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்குள் தற்போது பெரும் சர்ச்சைக்குரிய அமைச்சராக உள்ள விமல் வீரவன்ஸவின் கொழும்பிலுள்ள இல்லத்தின் மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்போவதாகக் கிடைத்த அழைப்பை அடுத்து பொலிஸார் விசாரணைகளை பல கோணங்களில் ஆரம்பித் துள்ளனர்.

கொழும்பு, வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்துக்கு கடந்த 12ஆம் திகதி மாலை 03 மணிக்கு இவ்வாறு அழைப்பு மேற்கொண்ட நபர் ஒருவர், வெள்ளவத்தை, ஜோசப் ஸ்டான்லி மாவத்தையிலுள்ள அமைச்சர் விமல் தங்கியிருக்கும் இல்லம் மீது தாக்குதல் நடத்தப்போவதாகத் தெரியப்படுத்தியுள்ளார்.

உடனே இது குறித்த விசாரணையை நடத்திய வெள்ளவத்தைப் பொலிஸார், சிம் அட்டை பதிவாகியுள்ளவரின் தகவலைப் பெற்றனர்.

யாழ்ப்பாணம் - வல்வெட் டித்துறையைச் சேர்ந்த சுதர்சன் என்பவரது பெயரில் இந்தச் சிம் அட்டை இருப்பது தெரியவந்த போதிலும் குறித்த நபருடன் பொலிஸார் நடத்திய விசாரணையில் ஜனவரி 13ஆம் திகதி தனது கையடக்கத் தொலைபேசி தொலைந்துவிட்டது எனப் பதிலளித்துள்ளார்.

இருந்த போதிலும் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் தீவிரப்படுத்தி, தொலைபேசி தற்போது இருக்கின்ற இடத்தைக் கண்டுபிடித்தனர்.

அந்த இடம், ஹற்றன் - கொட்டகலை, திம்புள்ளபத்த என்கின்ற முகவரியைக் காட்டியுள்ளது. 119 அவசர இலக்கத்துக்கு வந்த இலக்கத்தை மீள அழைத்தபோது தகாத முறையில் சந்தேகநபர் திட்டியுள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

இது சம்பந்தமான விசாரணைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

அமைச்சர் விமலுக்கு வெள்ளவத்தையில் மேற்படி முகவரியில் வீடொன்று இல்லை என்பதுவும் தெரியவந்துள்ளது.

## எதிரணியின் சில எம்.பிக்கள் தடுப்பூசியைப் பெற மறுப்பு!

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் திட்டம் இன்று ஆரம்பமாகியுள்ள நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் சில எம்.பிக்கள் தடுப்பூசியைப் பெறுவதற்கு மறுத்துவிட்டனர்.

தடுப்பூசி செலுத்தும் திட்டம் பொதுமக்கள், முன்னணி ஊழியர்கள் மற்றும் கொரோனாத் தொற்றால் அதிகளவாகப் பாதிக்கப்படக் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தே, அவர்கள் இவ்வாறு தடுப்பூசியைப் பெறுவதற்கு மறுத்துவிட்டனர்.

அதன்படி ஹரின் பெர்னாண்டோ, மனு நாணயக்கார, ஹேஷ விதானகே மற்றும் முஜிபுர் ரஷ்மான் ஆகிய எம்.பிக்களே இவ்வாறு தடுப்பூசியைப் பெற மறுத்தவர்கள் ஆவர்.

எவ்வாறெனினும் ஐக்கிய மக்கள் சக்தியின் திஸ்ஸ அத்தநாயக்க, திலிப் வேதாராச்சி மற்றும் மயந்த திஸாநாயக்க ஆகியோர் தடுப்பூசியைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பா.ஜ.கவை இலங்கையில் வேரூன்ற அனுமதியோம்!

## சஜித் அணியும் போர்க்கொடி



இலங்கை என்பது சுயாதீனத்தன்மையையும் இறையாண்மையையும் கொண்ட சுதந்திர நாடாகும். இங்கு இந்தியாவின் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் அதிகாரம் வேரூன்ற இடமளிப்பதென்பது,

நாட்டின் உள்ளக விவகாரங்களில் தேவையற்ற தலையீடுகள் ஏற்படுவதற்கு வழிவகுக்கும். எனவே, அதனை ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை என்பது சுயாதீனத்தன்மையும் இறையாண்மையும் கொண்ட சுதந்திரமான நாடாகும். அவற்றுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாதவாறான ஓர் அரசியலே நாட்டில் முன்னெடுக்கப்பட வேண்டும். அவ்வாறிருக்கையில் இந்தியாவின் ஆளுங்கட்சி அதன் கிளையொன்றை இலங்கையில் நிறுவுவதற்கு முயற்சிப்பதென்பது, எமது நாட்டின் சுயாதீன நிர்வாகத்தில் தேவையற்ற தலையீடுகள் ஏற்படுவதற்கு வழி வகுப்பதாகவே அமையும்.

திரிபுரா முதலமைச்சர் வெளியிட்டுள்ள கருத்தின் உண்மைத்தன்மை தொடர்பில் இன்னமும் தெளிவுபடுத்தப்படவில்லை. எனினும், இலங்கை போன்ற சிறிய நாடுகளில் இந்தியா அதன் அதிகாரத்தையும் அரசியல் வலுவையும் விஸ்தரிப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது என்பது தெளிவாகின்றது. இது குறித்து இந்தியாவின் பாரதிய ஜனதாக் கட்சி உத்தியோகபூர்வமாக அறிவித்ததன் பின்னரே எமது நிலைப்பாட்டை முழுமையாக வெளிப்படுத்த முடியும்.

எனினும், இதுவரையில் ஊடகங்களில் வெளியான செய்திகளின் அடிப்படையில் நோக்குகையில், திரிபுரா முதலமைச்சர் கூறியதைப் போன்ற நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்படுவதற்கு அனுமதிப்பதால் உள்ளக விவகாரங்களில் தேவையற்ற தலையீடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு உருவாகும் - என்றார்.

# கருத்துக்கள் சங்கமித்த மல்லிகை ஜீவா நினைவேந்தல் முரண் அறுத்து முன்னோக்கிச் செல்லும் இயக்கம்

முருகபூபதி

அண்மையில் மறைந்த ஈழத்தின் மூத்த எழுத்தாளரும், மல்லிகை ஆசிரியரும், மூவினத்தையும் சேர்ந்த கலை, இலக்கிய வாதிகளாலும் கலை இலக்கியப் பேராசிரியர்களாலும் ஆழ்ந்து நேசிக்கபட்ட – அடிநிலை மக்களின் எழுச்சிக்குரலாக திகழ்ந்த டொமினிக் ஜீவாவின் நினைவுகளைப் பகிர்ந்துகொள்ளும் அஞ்சலி நிகழ்வுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஒரு வருடகாலத்தையும் கடந்து நீடித்துச் செல்லும் கண்ணுக்குத் தெரியாத கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தலால், சமூக இடைவெளிபேணி வாழவேண்டிய சூழலுக்குள் முழு உலகமும் உள்வாங்கப்பட்டுள்ள பின்னணியில் – டொமினிக்ஜீவாவின் ஆளுமைப்பண்புகளை, மாற்றுக்கருத்தியல்கொண்டிருந்தவர்களிடத்திலும் அவர் காண்பித்த மனிதநேய ஜனநாயகப் பண்புகளையும் நினைவுபடுத்தும் வகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை லண்டன் விம்பம் அமைப்பின் சார்பில் எழுத்தாளரும் சமூகச்செயற்பாட்டாளருமான எம். பௌசர் ஏற்பாடு செய்திருந்த இணைய வழி காணொளி அரங்கில் – பிரித்தானியா, கனடா, நோர்வே, ஜேர்மனி, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, தமிழ்நாடு, இலங்கை எங்குமிருந்தும் எழுத்தாளர்களும், கலை, இலக்கிய ஆர்வலர்களும் பங்கேற்றனர்.

டொமினிக்ஜீவாவின் நினைவுகளை பகிர்தலும், அவரது பங்களிப்புகளை கௌரவித்தலும் என்ற தொனிப்பொருளில் உரைகள் நிகழ்த்தப்பட்டன.

இலங்கையிலிருந்து எழுத்தாளர்கள் ஐ. சாந்தன், சுதர்சன் செல்லத்துரை, மேமன்கவி, மல்லியப்பு திலகர், தமிழ்நாட்டிலிருந்து தோழர் வேலு, பா. செயப்பிரகாசம், லண்டனிலிருந்து ராஜேஸ்வரி, பாலசுப்பிரமணியம், மு. நித்தியானந்தன், ந. இரவீந்திரன், பிரான்ஸிலிருந்து தர்மினி, ஜேர்மனியிலிருந்து உமா, நோர்வேயிலிருந்து தாஸ் ஆகியோர் உரையாற்றினர்.

டொமினிக்ஜீவாவின் வாழ்க்கைப் பின்புலம், அவரது இலக்கியப்பிரவேசம் – அக்காலப்பகுதியில் நிலவிய சமூக அமைப்பும் சாதீய அடக்குமுறையும், வடபிரதேச பொதுவுடைமை இயக்கத்திற்குள் உருவான பிணக்கும் – பிளவும், கருத்தியல் போராட்டங்கள், இலக்கியத்தில் இழிசனர் வழக்கு குறித்து எழுந்த எதிர்வினைகள், இன விடுதலைப்போராட்டத்தின் ஊற்றுக்கண், வர்க்கப் போராட்டமும் தமிழ்த்தேசியமும், ஆக்கவிலக்கியத்தில் யதார்த்தப்பண்பும் கற்பனாவாத அம்சமும், மறுமலர்ச்சி காலம், முற்போக்கு இலக்கிய முகாம், போர்க்கால இலக்கியமும் புகலிட இலக்கியமும் முதலான பல்வேறு விடயங்கள் ஜீவா நினைவேந்தல் உரைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

அனைத்து கருத்தியலாளர்களுடனும் ஜீவா, முரண் அறுத்து ஜனநாயப்பண்புடன் இயங்கியதை உரையாற்றியவர்கள் சுட்டிக்காண்பித்தனர்.

டொமினிக்ஜீவா இலங்கையில் மூவினங்களையும் சேர்ந்த படைப்பிலக்கியவாதிகளாலும் புகலிடத்திலிருந்து



இலக்கிய செயற்பாடுகளில் தொடர்ந்தும் ஈடுபடுபவர்களாலும் ஆழ்ந்து நேசிக்கப்படுவதால், அவர் உலகப்பொது மனிதனாக திகழ்ந்தார் எனவும் புகழாரம் சூட்டப்பட்டார்.

இலங்கை அரசு, டொமினிக்ஜீவாவை நினைவுகூரும் வகையில் அஞ்சல் முத்திரை வெளியிடுவதற்கு வலியுறுத்த வேண்டும் எனவும், அவரது நினைவாக அவர் பிறந்த யாழ்ப்பாணத்தில் நினைவு மண்டபம் அமைக்கவேண்டும் எனவும் இந்த நினைவேந்தல் அரங்கில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி, கலந்துரையாடலுடன் நிறைவாக நிறைவுபேற்றது.

## "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைத் திட்டத்துக்கு அமைய சூரிய மின்னுற்பத்தி வேலைத்திட்டம்!

மீள்பிறப்பாக்க எரிசக்தி மேம்பாட்டின் கீழ் விநியோக மின்மாற்றிகளுடன் (ட்ரான்ஸ்போமர்) இணைப்புச் செய்து தனியார் துறையினரின் முதலீட்டின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் 100 கிலோ வாட்ஸ் சூரிய மின்னுற்பத்தி வேலைத்திட்டத்தை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

'சுபீட்சத்தின் நோக்கு' அரச கொள்கைப் பிரகடனத்துக்கமைய செயற்பட்டு 2030 ஆண்டாகும் போது ஒட்டு மொத்த மின்சாரத் தேவையின் அதிகளவை மீள்பிறப்பாக்க எரிசக்தி மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், குறித்த மீள்பிறப்பாக்க எரிசக்தி கருத்திட்டம் பெரும்பாலும் தனியார் துறையினரின் முதலீட்டின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய, இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை மின்சார தனியார் கம்பனிக்குச் சொந்தமான 7 ஆயிரம் விநியோக மின்மாற்றிகளுக்காக (ட்ரான்ஸ்போமர்) நிலப்பரப்பில் இயங்கும் சூரிய மின் நிலையத்துடன் இணைப்புச் செய்து மீள்பிறப்பாக்க மின்னுற்பத்தியை மேற்கொள்ளும் கருத்திட்டத்தை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் கருத்திட்டத்தின் கீழ் அடையாளங் காணப்பட்ட ஒரு மின்மாற்றிக்கு ஒரு சூரிய மின் உற்பத்தி கருத்திட்டம் என்ற வகையில் நடைமுறைப்படுத்தவும், அதற்கு ஏற்புடைய பிரதேசத்தின் பிரதேச செயலகங்களில் வியாபாரப் பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ள நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு போட்டித்தன்மையின் அடிப்படையில் விலைமனு கோரப்பட்டு முதலீட்டாளர் களைத் தெரிவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒரு சூரிய மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கு 120 லட்சம் முதலிடப்பட வேண்டியுள்ளதுடன், குறித்த மின்மாற்றிகளுக்கு அண்மையில் அமைந் துள்ள 40 பேர்ச்சஸ் காணித்துண்டில் சூரிய மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட வேண்டும். அதற் கமைய, மின்சக்தி அமைச்சர் சமர்ப்பித்த முன்மொழி யப்பட்டுள்ள கருத்திட்டம் 18 மாதங்களில் நடை முறைப்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## குற்றவியல் வழக்கு சட்ட கோவையில் திருத்தம்!

1979 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க குற்றவியல் வழக்குச் சட்டக் கோவையை திருத்தம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய பொலிஸ் நிலையத்துக்கு சமுகமளிப் பதற்கு நீதிவான் நீதிமன்ற நீதிபதிக்கு அதிகாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஒரு சில நீதிமன்றப் பிரிவுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள நீதிவான் நீதிமன்ற நீதிபதிகளுக்கு பொலிஸாரின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபரை கண்காணிப்பதற்காக குறித்த பொலிஸ் நிலையத்துக்குக் குறைந்தது மாதத்துக்கு ஒரு தடவையேனும் சமுகமளிப்பதற்கு நீதிவான் நீதிமன்ற நீதிபதிக்கு அதிகாரம் வழங்கும் வகையில் 1979 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க குற்றவியல் வழக்குச் சட்டக் கோவையை திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

அதற்கமைய, சட்டவரைஞர்களால் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த சட்டமூலத்தை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதற்கும் நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## மேல்மாகாணத்துக்கான தடுப்பூசிகளை அரசு எவ்வாறு பெற்றுக்கொள்ளும்?

### சட்டத்தரணி சுகத் ஜயசுந்தர கேள்வி

கொவிட்-19 வைரஸ் பரவலைத் தடுப்பதற்காகக் கொண்டுவரப்பட்டுள்ள தடுப்பூசிகளை முறையாகப் பயன்படுத்தாவிட்டால், வைரஸ் தொற்று மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் மஹரகம தொகுதி அமைப்பாளர் சட்டதரணி சுகத் ஜயசுந்தர தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு –

கொவிட் – 19 வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக ஐந்து லட்சம் தடுப்பூசிகள் நாட்டுக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. அவை தற்போது இராணுவம், பொலிஸார் மற்றும் சுகாதாரப் பிரிவினர் எனப் பலருக்கும் செலுத்தப்பட்டுள்ளன. மேலும் தடுப்பூசிகள் கொண்டுவரப்படவுள்ளதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். ஆனால் எவ்வாறு கிடைக்கப்பெற போகின்றது என்பது தொடர்பில் தெரிவிக்கப்படவில்லை.

இந்தியாவிலிருந்து தடுப்பூசிகள் எடுத்து வரப்பட்டமையைப் போன்று, சீனாவிலிருந்தும் கொண்டுவருவதாக தெரிவித்துள்ளனர். எனினும் இந்த தடுப்பூசிகளுக்கு உலக சுகாதார ஸ்தாபனத்தால் இன்னமும் அனுமதி கிடைக்கப் பெறவில்லை.

இந்நிலையில், கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களின் தொகை தினந்தோறும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. நாள் ஒன்றுக்கு 3 – 4 பேர் வரை வைரஸ் தொற்றால் உயிரிழக்கின்றனர். அதற்கமைய கொரோனாத் தொற்றுக்குள்ளான நோயாளர்களுக்கு போதுமான வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் எமக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. தொற்றாளர்கள் குணமடைந்து சென்றமையின் பின்னர், சிகிச்சை நிலையங்களில் கடமை புரிந்து வருபவர்கள் ஊடாக வைரஸ் கொத்தணி உருவாகினால் அதனைத் தடுப்பதற்கான திட்டங்கள் காணப்படுகின்றனவா?

கொரோனாத் தொற்றால் உயிரிழந்ததாகக் கூறினாலும், அவர்கள் வேறு நோய்க்குறிகள் காரணமாகவும் பாதிப்படைந்துள்ளனர். இந்நிலையில் கொரோனா தொற்றுக்குள்ளான நபர்கள் என்று கூறி அவர்களை வேறுபடுத்தி வைத்துவிட்டு, மற்றைய நோய்குறிகளுக்கான சிகிச்சைகளை அளிக்காமையின் காரணமாக இவ்வாறு உயிரிழப்புகள் அதிகரிக்கின்றனவா? என்றும் எமக்கு சந்தேகம் எழுந்துள்ளது.

இந்நிலையில் மேல்மாகாணத்துக்கு தடுப்பூசிகளை வழங்கவுள்ளதாகக் கூறுகின்றனர். மேல்மாகாணத்துக்கான தடுப்பூசிகளை எவ்வாறு பெற்றுக் கொள்ளப் போகின்றார்கள் என்பதை தெரிவிக்கவில்லை. தடுப்பூசிகள் விடயத்தில் முறையாக செயற்படாவிட்டால் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு முடியாது. வைரஸ் பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராவிட்டால், நாட்டின் கல்வி , பொருளாதாரம் என அனைத்து துறைகளும் மேலும் வீழ்ச்சியடையவேண்டிய நிலைமை ஏற்படும். – என்றார்.

## மரணச் சடங்குக்கும் புதிய கட்டுப்பாடுகள்!

மரணச் சடங்குகளை நடத்துவோர் 24 மணித்தியாலத்திற்குள் அனைத்து நடவடிக்கைகளையும் நிறைவு செய்ய வேண்டும் என புதிய கட்டுப்பாடு அறிவிக்கப்பட்டுள்ளது. 24 மணித்தியாலத்துக்குள் அனைத்து இறுதி அஞ்சலி நடவடிக்கைகளும் நிறைவு செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட புதிய தீர்மானங்கள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

'மரண வீடுகளில் கலந்து கொள்ளும் நபர்களின் எண்ணிக்கையில் கட்டுப்பாடுகள் விதிப்பதற்கான தீர்மானத்தை தாம் எடுத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன கூறினார்.

அத்துடன் 24 மணித்தியாலங்களுக்குள் அஞ்சலி நடவடிக்கைகளை நிறைவு செய்ய வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று திருமண நிகழ்வுகள் மற்றும் ஏனைய நிகழ்வுகளையும் நிறைவு செய்ய வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன குறிப்பிட்டார்.

இதுவரையில் 150 பேருக்கு மரணச் சடங்கில் பங்குபற்ற அனுமதி வழங்கப்பட்டிருந் தது. எனினும் அதனை 50ஆக குறைக்க மீண்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சட்டரீதியாக அறிவிப் பதற்கான அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் இரவு நேர கேளிக்கை விடுதி தொடர்பிலும் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

அதற்கான தீர்மானங்கள் ஓரிரு நாள்களில் அறிவிக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன மேலும் தெரிவித்துள்ளளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஆசிரியருக்கு கொரோனா பாடசாலைக்குப் பூட்டு!

## ஹற்றனில் சம்பவம்

ஹற்றன் பகுதியிலுள்ள பிரதான பாடசாலையில் பணிபுரியும் ஆசிரியை ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் அந்தப் பாடசாலை நேற்று (செவ்வாய்க் கிழமை) முதல் மறு அறிவித்தல் விடுக்கப்படும் வரை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

பாடசாலை முழுவதும் தொற்றுநீக்கி தெளித்து, தொற்று நீக்கம் செய்யும் நடவடிக்கையை முன்னெடுப்ப தற்காகவே பாடசாலை இவ்வாறு தற்காலிகமாக மூடப் பட்டுள்ளது என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த ஆசிரியைக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து சிகிச்சைக்காக டிக்கோயா வைத்திய சாலைக்குச் சென்றுள்ளார்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவர்க ளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட் டுள்ளது. கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

அவர் அண்மையில் பாடசாலைக்கும் சென்றுள் ளார். தரம் 6 மற்றும் 11 ஆம் வகுப்புகளுக்கு கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். இப்பாடசாலையில் அதிபர் உட்பட 40 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றமை யுடன் சுமார் ஆயிரம் மாணவர்கள் வரை கல்வி கற் கின்றனர்.

# அம்பாந்தோட்டை துறைமுகத்திலுள்ள கடற்படை முகாம் அகற்றப்படமாட்டாது!

## அமைச்சர் உதய கம்மன்பில தெரிவிப்பு

அம்பாந்தோட்டை துறைமுக பாது காப்பு முழுமையாக இலங்கை கடற்ப டையினர் வசமே காணப்படுகிறது.

எனவே, அங்குள்ள கடற்படை முகாமை நீக்குவதற்கான எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட வில்லை என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறி விக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

கேள்வி:- அம்பாந்தோட்டை துறை முகத்தில் இலங்கை கடற்படை முகாமை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

பதில்: எமது அரசாங்கம் ஆட்சியை பொறுப்பேற்ற பின்னர் இது தொடர் பில் சீனாவுடன் நடைபெற்ற பேச்சுக ளில் அம்பாந்தோட்டை துறைமுகத் தின் பாதுகாப்பு முழுமையாக இலங்கை கடற்படையினர் வசம் என்ற தீர்மா னம் எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, அங்குள்ள கடற்படை முகாமை அகற்றுதல் தொடர்பான எவ்வித பிரச்சினையும் ஏற்படாது.

# அம்பலாங்கொடை நகரசபை உறுப்பினர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தார்!

அம்பலாங்கொடை நகரசபை உறுப்பினர் தன சேனா மதுவகே கொவிட் -19 தொற்றால் பாதிப்ப டைந்து கடந்த திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் சபாநாயகர் டபிள்யூ. ஜே. எம் லொகு பண்டாரவுக்குப் பின்னர் கொவிட் - 19 காரணமாக உயிரிழந்த இரண்டாவது அரசியல்வாதி இவர் ஆவார். கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட மதுவகே, அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் தனது 68 ஆவது வயதில் உயிரிழந்துள்ளார்.




# வவுனியா பொது வைத்தியசாலைக்கு புதிதாக 9 வைத்தியர்கள் நியமனம்!

வவுனியா, ஜன. 17

வவுனியா பொது வைத்திய சாலைக்கு 9 வைத்தியர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர் என வைத்தி யசாலையின் பணிப்பாளர் காண் டீபன் தெரிவித்தார்.

மத்திய சுகாதார அமைச்சால் வவுனியா மாவட்ட பொது வைத்தி யசாலை உட்பட பிரதேச வைத்தி யசாலைகளுக்கு 11 வைத்திய உத் தியோகத்தர்கள் கடந்த திங்கட்கிழமை புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனத்தில் வவுனியா பொது வைத்தியசாலைக்கு 9 வைத் தியர்களும், செட்டிகுளம் மற்றும் நெடுங்கேணி பிரதேச வைத்திய சாலைகளுக்கு தலா ஒரு வைத்தி யரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா பொது வைத்திய சாலையில் மகப்பேறு, இரத்த வங்கி உட்பட பல்வேறு துறைகளைச் சேர்ந்த 9 வைத்தியர்கள் நியமிக்கப் பட்டுள்ளமையுடன் அவர்களில் 8 பேர் நேற்று (செவ்வாய்க்கிழமை) கடமைகளைப் பொறுப்பேற்றுள் ளமையுடன் ஒருவர் எதிர்வரும் நாள்களில் பொறுப்பேற்பார் என்று வவுனியா வைத்தியசாலையின் பணிப்பாளர் காண்டீபன் தெரிவித் தார்.










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.02.2021 இல் வெளியிடப்பெற்றது.